வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu


Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 09.05.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 130 | பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## புதிய திருத்தந்தையாக அமெரிக்காவின் றொபேர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட் தெரிவு

### தனது திருத்தந்தைக்கான பெயரை 14ஆம் லியோ என்றும் அறிவித்தார்



வத்திக்கான், மே 09

உலக வாழ் கத்தோலிக்க மக்களின் புதிய திருத்தந்தையாக அமெரிக்கரான றொபேர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட் (Robert Francis Prevost) தெரிவானார். இவர் திருத்தந்தை 14ஆம் லியோ என்று அழைக்கப்படுவார்.

புதிதாகத் தெரிவான திருத்தந் தையை கர்தினால்கள் சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் நிறைந்திருந்த மக்கள் முன்பாக

11

## உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி; ஐ. த. தே. கூட்டணியுடன் பேச்சு!

### கஜேந்திரகுமார் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 09

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுடன் கலந்துரையாடி வருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ் தேசியப் பேரவை உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம். ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்களான த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் எம். பி, சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோருடன் மேற்படி விடயம்

11

## வடக்கு, கிழக்கில் இணைந்து ஆட்சி:

# தமிழ் கட்சிகள் பேச்சு நடத்தினால் ஆழமாக ஆராய்ந்த பின் தீர்மானம்!

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, மே 09

“வடக்கு, கிழக்கில் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது குறித்து தமிழ் கட்சிகள் உத்தியோகபூர்வமாக எந்த அறிவித்தலையும் அரசாங்கத்துக்கு வழங்கவில்லை. தமிழ்க் கட்சிகள் எம்முடன் பேச்சு நடத்தினால் ஆழமாக ஆராய்ந்த பின்னரே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும்”, என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல் என்பன ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டது. இந்த மூன்று தேர்தல்களிலும் மக்களின் நடத்தை

11



## இலங்கைக்கு 100 கோடி டொலர் சலுகை கடன்!

கொழும்பு, மே 09

தனியார்துறை மேம்பாட்டுக்காகவும் வேலை வாய்ப்பு உருவாக்க முயற்சிகளை ஊக்குவிப்பதற்காகவும் 3 வருடங்களுக்கு 100 கோடி டொலர் சலுகை கடனுதவியை வழங்குவதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நாட்டுக்கு வருகை தந்த உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார். இதைத்

11

## அரசாங்கம்மீதான தமிழரின் நம்பிக்கை குறையவில்லை!

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 09

“ஜனாதிபதிமீதும் - அரசாங்கத்தின்மீதும் தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை குறையவே இல்லை. மக்களின் எதிர் பார்ப்புகளை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம். தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டனர் என்று சில குழுக்கள் அரசியல் இருப்புக்காக போலிப் பிரசாரம் செய்கின்றன.”

- இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும்

11

## ஐ.எம்.எவ்வுடனான இணக்கப்பாடு; வாக்குறுதிகளை அரசு மீறுகிறது!

### எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 09

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) இணக்கப்பாடு தொடர்பில் அரசாங்க வாக்குறுதிகள் மீறப்படுகின்றன என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் சிறுவர்களின் சேமிப்பு வட்டி விகிதம் குறைக்கப்பட்டமை, வெளிநாட்டு டிஜிற்றல் சேவை வழங்குநர்களுக்கு விதிக்கப்பட்ட புதிய வரிகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றில் கேள்விகளை எழுப்பினார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தால் கையெழுத்திடப்பட்ட சர்வதேச

11

## காணி சுவீகரிப்பின் உள்நோக்கம் என்ன?

### துறைசார் அமைச்சரிடம் சிறீதரன் எம். பி. கேள்வி!

கொழும்பு, மே 09

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 5 ஆயிரத்து 700 ஏக்கருக்கும் அதிகமான தமிழர்களின் பூர்வீக நிலங்களை சுவீகரிப்பதற்காக கடந்த மார்ச் 28ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் உள்நோக்கம் என்ன என்பதை கமத்தொழில்,

11

## அர்ச்சுனா சபையிலிருந்து நேற்று வெளியேற்றப்பட்டார்!

கொழும்பு, மே 09

யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா ஒழுங்கீனமாக நடந்தமைக்காக சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

நேற்று வியாழக்கிழமை பாராளுமன்ற விவாதத்தில் உறுப்பினர்கள் உரையாற்றியபோது அவர்களின் உரைகளை பலமுறை இடைமறித்தும் - குறுக்கிட்டும் அர்ச்சுனா எம். பி. பேசினார்.

11

## யானை மிரண்டு ஓடியதில் சிறுவன் உட்பட மூவர் காயம்!

யாழ்ப்பாணம், மே 09

கோயில் திருவிழாவில் வெடிகள் கொளுத்தப்பட்ட போது திருவிழாவுக்காக அழைத்து வரப்பட்ட யானை மிரண்டு ஓடியதில் 4 வயது சிறுவன் உட்பட மூவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு தாவடியிலுள்ள ஆலயம் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆலயத்தின் திருவிழாவுக்காக தென்னிலங்கையிலிருந்து இரு யானைகள் அழைத்து

11

# ஓர் எம். பியை விட தகுதியானவரே யாழ். மாநகர முதல்வராக வேண்டும்

## முன்னாள் முதல்வர் மணிவண்ணன்

யாழ்ப்பாணம், மே 09

"யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் பாராளுமன்ற உறுப்பினரை விட சிறப்பாக செயல்படக்கூடியவராக இருக்க வேண்டும்.", என்று யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் பதவி என்பது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை விடவும் முக்கியமானது. யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் பாராளுமன்ற உறுப்பினரை விட சிறப்பாக செயல்படக்கூடியவராக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் இராஜதந்திரிகள் யாழ்ப்பாணம் முதல்வரை நிச்சயம் சந்திப்பார்கள். அவ்வாறானவர்களுடன் இராஜதந்திர ரீதியாக உரையாட வேண்டும். யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள், தமிழ் மக்களின் அபிலாசைகள், அவர்களின் பிரச்னைகள் என்பவற்றை எடுத்துக்கூற வேண்டும்.

எனவே, முதல்வராக தமது கட்சி சார்பாக முன்னிலைப் படுத்தப்படுவர் சிறப்பானவராக இருக்க வேண்டும் என கட்சிகள் பொறுப்புடன் உணர்ந்து கொண்டு அதற்கு ஏற்றதுபோல் முதல்வரை தெரிவு செய்ய வேண்டும்", என்றார். (ஐ)




# இரசவர்க்கம் நூல் அறிமுகம் கொழும்பு தமிழ் சங்கத்தில்!

கொழும்பு, மே 09

கொழும்பு தமிழ் சங்கம், எழுநா என்பவற்றின் ஏற்பாட்டில் முதல்வர் பால. சிவகடாட்சம் தொகுத்த யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த 'இரசவர்க்கம்' என்ற நூல் அறிமுக விழா அண்மையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்க மருத்துவர் விக்னவேணி செல்வநாதன் தலைமை வகித்திருந்தார்.

நிகழ்வில் உரையாற்றிய சமூக ஆய்வாளரான கந்தையா சண்முகலிங்கம், "பால. சிவகடாட்சம் ஏட்டுப் பிரதியிலிருந்த 'இரசவர்க்கம்' எனும் நூல் பிரதியை அச்சில் பதிப்பித்துள்ளார். இந்தநூல் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்ததாகும். செகராசசேகரன் என்ற பெயருடைய மன்னனால் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சமஸ்கிருத மொழியில் பாண்டித்தியம் உடைய அறிஞர்களால் ஆக்குவிக்கப்பட்டது. செகராஜசேகரத்தின் ஒருசில பகுதிகளே கிடைத்துள்ளன. அழிந்து போனதாகக் கருதப்பட்ட 'இரசவர்க்கம்' எனும் பகுதியின் ஏட்டுப் பிரதியொன்றை இந்நூலாசிரியரின் குடும்பத்தினர் பாதுகாத்து வைத்திருந்தனர். அந்தப் பிரதி அதிர்ஷ்டவசமாக அறிஞர் பால. சிவகடாட்சத்தின் கையில் கிடைக்கப்பெற்றது. இந்த ஏட்டுப்பிரதியை வாசித்து அதனை அச்சு நூல் வடிவமாக்கியுள்ளார். இந்நூல் காலத்தின் கட்டாயத் தேவை", என்றார்.

இந்த நூல் உடலுக்கு ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்கும் மருந்துப் பொருட்களின் குணங்களை எடுத்துரைக்கும் வெண்பாக்களால் உருவானது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ். புகையிரத நிலையத்தில் குடிதண்ணீர் இயந்திரம் திறப்பு

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் இயந்திரம் புனரமைத்து திறந்து வைக்கப்பட்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 1972ஆம் ஆண்டு பழைய மாணவர்களால் நடத்தப்படும் குடிதண்ணீர் எம். எச். சி. - 72 செயல்திட்டத்தின் திறப்பு விழா நிகழ்வில் யாழ்ப்பாண புகையிரத நிலைய பொறுப்பதிகாரி பிரதீபன், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் குடிதண்ணீர் சவர்த்தன்மைமிக்கதாக காணப்படும் நிலையில் குறித்த இயந்திரத்தால் புகையிரத நிலையத்துக்கு வருபவர்களும் புகையிரத நிலையத்துக்கு அருகில் வசிப்பவர்களும் பயன்பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# தமிழ்த் தேசிய செயல்பாட்டாளர்களை ஒன்றுகூட்ட முன்நிபந்தனை வேண்டாம்!

## மூத்தபோராளி மனோகர்

யாழ்ப்பாணம், மே 09

தமிழ்த் தேசியக் கட்சிகளாக இனங்காணப்படுபவர்களுடன் பேசும்போது யார் முதல்வர் என்பது போன்ற விடயங்களை முன்நிபந்தனையாக வைக்காமல் கூடிக் கலந்தாலோசிப்பதே சிறந்தது. இம்முயற்சி கைகூடும்வரை சுமந்திரனை ஒதுக்கி வைத்தாலே எல்லாம் சுபமாக முடியும் என மூத்த போராளி மனோகர் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபை மேயர் விவகாரம் தொடர்பாக நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னரான நிலைமை தொடர்பான விடயத்தில் பதில் பொதுச் செயலாளர் சுமந்திரனை கையாளவிடுவது எதிர்பார்க்கும் நோக்கங்களுக்கு மாறான விளைவையே தரும் என்பதனை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்குக் குறிப்பாக மத்திய குழுவினருக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக யாழ். மேயர் விடயம் கவனத்துக்குரியது. இதனை முன்நிபந்தனைபோன்று வைப்பது ஏற்புடையதல்ல.

சுமந்திரன் கட்சிக்குள் நுழைந்த காலத்தில் இருந்தே தமிழ்த் தேசிய உணர்வாளர்களை நோகடிக்கும் விதத்திலேயே செயல்பட்டு வந்துள்ளார். 2018 நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது தேர்தல் முடிந்த பின்னரே மேயர் தொடர்பாக முடிவெடுப்பது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக முடிவெடுத்தனர்.

தமிழ் அரசுக் கட்சிப் பணிமனையில் நடைபெற்ற இக்கூட்டத்தின் முடிவைத் தட்டச்சு செய்து கொண்டிருக்கும்போது வெளியில் வந்த சுமந்திரன் ஊடகவியலாளர்களிடம் "ஆனல்ட் தான் மேயர்" என அறிவித்தார். சில நிமிட நேரத்தில் அங்கே வந்த கட்சித் தலைவர், செயலாளர் ஆகிய இருவரிடமும் "ஆனல்ட்தான் மேயர்" எனச் சுமந்திரன் சொல்கிறாரே எனக் கேட்டனர் ஊடகவியலாளர்கள். அவர்கள் இருவரும் அவ்வாறான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தனர்.

குழம்பிப் போயிருந்த ஊடகவியலாளர்கள் மீண்டும் அங்கு வந்த சுமந்திரனிடம் கட்சித் தலைவர், செயலாளரின் கூற்றைச் சுட்டிக் காட்டினர். அதற்கு மிக அலட்சியமாக "அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். ஆனால், ஆனல்ட்தான் மேயர்" என எகத்தாளமாகக் குறிப்பிட்டார். கட்சியில் தலைவர், செயலாளர் என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல என்பதே அவரது முடிவு.

மாகாண சபையில் இறுதிப்போரில் நடைபெற்றது இனப்படுகொலையே என்றும் இதற்கு சர்வதேச விசாரணையே வேண்டும் என்று முதலமைச்சர் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். இது தற்போது ஜே. வி. பி.யின் சட்டத்தரணியாக விளங்கும் சுமந்திரனுக்குச் சினமூட்டியது. முதல்வருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்தார். சுமந்திரன் சார்பில் ஆனல்ட்தான் மும்முரமாக இயங்கினார். பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்கினால் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தைத் தற்போதைய கட்சித் தலைவர் சீ. வீ. கே. சிவஞானமே ஆளுநரிடம் கையளித்தார்.

ஆனால், இந்த விடயம் தொடர்பாகப் பெருந்தலைவர் இரா. சம்பந்தனிடம் கலந்தாலோசிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்தளவுக்குத் தன்னிச்சையாகச் செயல்பட்டார் சுமந்திரன், தனது சார்பில் இத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததுக்கு சன்மானமாகவே ஆனல்ட் தான் மேயர் என்று முடிவெடுத்தார்.

பொதுவேட்பாளர் விடயத்திலும் தன்னிச்சையாகவே முடிவெடுத்தார். யார் பொதுவேட்பாளர் யார் என்று முடிவெடுக்க முன்னரே அவரைத் தோற்கடிப்பது எனச் சுமந்திரன் தீர்மானித்தார். வழக்கைத் தொடங்குவதற்கு முன்னரே தீர்ப்பை எழுதும் நீதிபதி யானார் அவர். ஆயிரம் விகாரைகளை அமைக்கும் உறுதியுடன் இருக்கும் சஜித் பிரேமதாஸவே அவரின் தெரிவாக இருந்தது.

யாழ். மேயர், பொதுவேட்பாளர் விடயங்களில் தலைமையின் முடிவுக்கு எதிரான நிலைப்பாடு எடுத்துவிட்டு மத்திய குழு என்றொரு முலாம் பூசித் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவானவர்களைக் கட்சியில் இருந்து துரத்துவதிலேயே இவர் அக்கறையாக உள்ளார். கட்சித் தேர்தலில் தனக்கு எதிராக செயல்பட்டவர்களை நீக்கினால்தான் தான் தலைவராக முடியும் என நம்புகிறார். கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைக்கும் முயற்சி நடைபெற்றபோது தமிழ் அரசுக் கட்சியினரைவிடக் குறைவானர்களே முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் இருந்தனர். எனினும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினரையே முதல்வராக்க இரா. சம்பந்தன் முடிவெடுத்தார்.

பெரும்பான்மை தம்மிடம் உள்ளதென அவர் நினைக்கவில்லை. அவர் இன ஐக்கியத்தையே பெரிதாக நினைத்தார். அதேபோல தற்போதுத் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்துச் செயல்பட முடிவெடுப்பதற்கு முன்நிபந்தனை விதிப்பது போன்று யாழ். மேயர் எந்தக் கட்சி என்று தானே முடிவெடுக்கிறார். ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்று கூறுவார்கள். அந்த நிலையை உருவாக்கி சந்தி சிரிக்கும் நிலைமை உருவாகும் அபாயம் உள்ளது. எனவே, இந்த அபாயத்தை தவிர்க்க சுமந்திரனைத் தவிர்த்துக் கட்சித் தலைவரே நேரடியாகக் கையாள்வதே சிறந்தது. அத்துடன், பொதுவேட்பாளருக்கு ஆதரவாகச் செயல்பட்டவர்களுக்கு விளக்கம் கோரும் கடிதத்தை மீளப்பெறுவது தமிழ்த் தேசியத்தை நேசிப்பவருக்கு ஆறுதலளிக்கும் விடயமாக இருக்கும்.

எனவே, தற்போது தமிழ்த் தேசியக் கட்சிகளாக இனங்காணப்படுபவர்களுடன் பேசும்போது யார் மேயர் என்பது போன்ற விடயங்களை முன்நிபந்தனையாக வைக்காமல் கூடிக் கலந்தாலோசிப்பதே சிறந்தது. இம்முயற்சி கைகூடும் வரை சுமந்திரனை ஒதுக்கி வைத்தாலே எல்லாம் சுபமாக முடியும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
09.05.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## பிரதிநிதிகளை தெரிவு செய்கின்றபோது...

யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டமைக்காக பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார். குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் உரைகளை ஒலிபரப்புவதும் ஏற்கனவே தடை செய்யப்பட்டுள்ளது. நமது மக்கள் தங்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்யும்போது அதிக கவனம் செலுத்தவேண்டும் - அவ்வாறில்லாது போனால் இவ்வாறான விடயங்கள்தான் இடம்பெறும். வெறும் உணர்ச்சிகரமான பேச்சுகள் மீதான கவர்ச்சியாலும் பரவசமூட்டும் பேச்சுகள்மீதான இரசனையாலும் ஒருவரை தெரிவு செய்யும்போது ஒட்டுமொத்த சமூகத்தின் அறிவாற்றலும் ஏளனம் செய்யப்படும் நிலைமையே ஏற்படும்.

அரசியலில் எதிரிகளாக இருந்தபோதிலும்கூட ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மதிப்புடன் நோக்கப்பட்டிருக்கின்றனர். தென்னிலங்கை தலைவர்களால் மதிக்கப்பட்டனர். சிங்கள தேசியவாத அடிப்படையில் முரண்பட்டபோதிலும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தொடக்கம் அமிர்தலிங்கம் வரையில் இறுதியாக ஒப்பீட்டு அடிப்படையில் இரா. சம்பந்தன் உட்பட பல தமிழ் அரசியல் தலைவர்கள் சிங்கள அரசியல்வாதிகளால் மதிக்கப்பட்டிருக்கின்றனர். இதேபோன்று, தமிழ் அரசியல் தலைவர்களும் சிங்களத் தலைவர்களோடு கண்ணியமான அரசியல் நடத்தையுடன் மோதியிருக்கின்றனர்.

இப்படியான ஓர் அரசியல் பாரம்பரியமுள்ள யாழ்ப்பாணத்திலிருந்து இன்று தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒப்பிட்டு நோக்கினால் கவலையே மிஞ்சும். ஒட்டுமொத்த தமிழ் இனமும் தலைகுனிய வேண்டிய நிலைமையே ஏற்படும். ஆயுதப் போராட்டத்தின் வீழ்ச்சியின் பின்னரான அரசியல் சூழலை ஒரு வரியில் கூறுவதானால் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை'யாகவே தொடர்கிறது. பாராளுமன்றத்துக்கு மாகாண சபைக்கு, உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவாகும் நபர்கள் தவறு செய்தால் - அரசியல் நாகரிகம் மறந்து செயல்பட்டால் - அது அவர்களை தெரிவு செய்தவர்களின் அறிவாற்றலிலுள்ள குறைபாடாகவே நோக்கப்படும்.

மக்கள் பிரதிநிதிகள் என்போர் ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் அடையாளமாகவும் அரசியல் முகமாகவும் நோக்கப்படுபவர்கள். அவ்வாறானவர்களை தெரிவு செய்கின்றபோது சமூக பொறுப்புடனும் தூரநோக்குடனும் வாக்குகளை பயன்படுத்த வேண்டும். அவ்வாறில்லாது, வெறும் உணச்சிகரமான வார்த்தைகளுக்கு பின்னால் இழுபட்டுச் செல்லும்போது தற்போது பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டது போன்ற நிலைமையே ஏற்படும். எதிர்காலத்தில் தங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களை, மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்கின்றபோது முன்னைய தவறுகளுக்கு இடமளிக்காத வகையில் தமிழ் வாக்காளர்கள் பொறுப்புடனும் தூரநோக்குடனும் செயல்பட வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் விடயத்தில் அரசியல் கட்சிகளை விடவும் மக்களே பொறுப்புடையவர்கள். அரசியல் கட்சிகள் எவரையும் வேட்பாளர்களாக நிறுத்தலாம். ஆனால், அவர்களில் சரியானவர்களை பொருத்தமானவர்களை தெரிவு செய்ய வேண்டியது மக்களின் பொறுப்பாகும். எவ்வாறு, அன்னப்பட்சி பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தால் பாலை பிரித்தறிந்து அருந்துமோ அவ்வாறுதான் பல வேட்பாளர்கள் மத்தியில் பொருத்தமானவர்களை மக்கள் ஆராய்ந்தறிந்து பிரதிநிதிக்கான வாய்ப்பை வழங்க வேண்டும்.

# வட மாகாணத்தில் சிறுதானிய செய்கை ஊக்குவிப்புத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 09

வட மாகாணத்தில் சிறுதானிய செய்கையை ஊக்குவிக்கும் திட்டத்தை விவசாய திணைக்களம் முன்னெடுத்துள்ளது. இதன்படி, ஓர் ஏக்கரில் சிறுதானிய பயிர் செய்கையை முன்னெடுப்பவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் ஊக்குவிப்பாக வழங்கப்படும் என்று மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சுகந்தினி செந்தில்குமரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளத்தக்க வகையில் காலநிலைக்கமைவான விவசாய முயற்சியின் கீழ், சிறுதானியங்கள் மிகப் பொருத்தமான பயிர் தெரிவாகும். மிகக் குறைந்த உள்ளீட்டுகளைக் கொண்டு பயிரிடக் கூடியதாக இருப்பதும் மிகக் குறைந்த நீர்த் தேவையுடன் மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதும் சிறுதானியங்களுக்கான தேவை மற்றும் விலை அதிகமாக இருப்பதும் சிறுதானிய செய்கைக்கு சாதகமான காரணங்களாக அமைந்துள்ளன. இந்த அடிப்படையில், வட மாகாணத்தில் சிறுதானியச் செய்கையை ஊக்குவிப்பதற்கான திட்டத்தை வட மாகாண விவசாயத் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

இதற்காக மாகாண குறித்து ஒதுக்கப்பட்ட நிதி மூலத்திலிருந்து 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வட மாகாணத்துக்கு உட்பட்ட ஐந்து மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு சிறுதானிய செய்கையை ஊக்குவிப்பதற்கான நிதி உதவி வழங்க ஏற்பாடாகியுள்ளது. சாமை, திணை, இறுங்கு, கம்பு, வரகு, குரக்கன் ஆகிய சிறுதானியங்கள் இத் திட்டத்தின் கீழ் ஊக்குவிக்கப்படவுள்ளன. ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானிய செய்கையை மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு ரூபாய் பதினைந்தாயிரம் ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவுள்ளது. குறைந்தது கால் ஏக்கர் பரப்பில் சிறுதானிய செய்கையை மேற்கொள்பவர்களும் இதற்காக விண்ணப் பிக்க முடியும். விண்ணப்ப முன்னுரிமை அடிப்படையில் பயனாளர்கள் தெரிவு செய யப்படவுள்ளார்கள்.

சிறுதானிய செய்கைக்கான விதை உள்ளீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு விவசாயத் திணைக்களம் ஒழுங்குளை மேற்கொண்டுள்ளது. மேலும், சிறுதானியச் செய்கை தொடர்பான தொழில்நுட்ப வழிகாட்டல்களையும் விவசாயத் திணைக்களம் வழங்குவதோடு சிறுதானிய உற்பத்தியை சந்தைப்படுத்துவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளது.

சிறுதானிய செய்கையில் ஈடுபட ஆர்வம் உள்ளோர், குறித்த பிரதேசத்திற்கான விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தரை அல்லது வட மாகாண விவசாயத் திணைக்கள மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்களையோ அல்லது வட மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ள முடியும் - என்றுள்ளது. (ஐ)

## கிளிநொச்சி பேருந்து நிலையத்தின் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

கிளிநொச்சி, மே 09

கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தை மேலும் அபிவிருத்தி செய்து வினைத்திறனாக செயல்பட வைப்பது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட பதில் அரச அதிபர் எஸ். முரளிதரன், வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ. சோதிநாதன், மாவட்ட மேலதிக அரச அதிபர் காணி நளாயினி இன்பராஜ், வட மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபைத்தலைவர் ஆர். உமாகரன், பிரதேச செயலாளர், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கரைச்சி பிரதேச செயலாளர், வர்த்தகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

பேருந்து நிலையத்தை எதிர்காலத்தில் கரைச்சி பிரதேச சபையிடம் கையளித்து வினைத்திறனாக முன்னெடுப்பது தொடர்பாகவும் குறித்த விடயத்தை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்கு சமர்ப்பிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்!

யாழ்ப்பாணம், மே 09

ஏழாலை அத்தியடி முருக மூர்த்தி ஆலயத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 01.30 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## சிவபூமி அறக்கட்டளையின் சேவைகள் இனி தீவகத்திலும்!


யாழ்ப்பாணம், மே 09

நொத்தாரிசு சுப்பிரமணி யம் இல்லம் சிவ பூமி அறக் கட்டளைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிவ பூமி அறக்கட்டளையானது வேலணையில் தமது பணியினை ஆற்றவுள்ளது", என்று அதன் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித் துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

வேலணை பங்களாவடி வீதியில் அமைந்துள்ள அம ரர் நொத்தாரிசு சுப்பிரமணி யம் இல்லத்தை அவரின் நினைவாக அவரது குடும்பத்தவர்கள் சிவபூமி அறக் கட்டளைக்கு தர்மசாதன மாக வழங்கியுள்ளார்கள். இதன் மூலம் சிவ பூமி அறக் கட்டளை தீவகத்தில் தனது பணியை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான ஆரம்ப வேலைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மே - 09 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 26
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துவாதசி




**மேடம்**

குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**இடபம்**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்குவீர்.

**கடகம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்தை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**சிம்மம்**

கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புது முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கன்னி**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் அவ்வபோது டென்ஷன் ஆவீர்கள்.

**துலாம்**

குடும்பத்தில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும்.

**விருட்சிகம்**

குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும்.

**தனுசு**

உங்களின் இல்க்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**மகரம்**

குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

**கும்பம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**மீனம்**

சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் கிடைக்கும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். தன்னம்பிக்கை துளிர்விடும் .

# உழவியந்திரத்தின் சக்கரத்தினுள் சிக்குண்ட இளம் குடும்பஸ்தர் பலி

## யாழ்ப்பாணத்தில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணம் - அராலி பகுதியில் உழவியந்திரத்தின் சக்கரத்தினுள் சிக்குண்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். அராலி மேற்கு, வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் தனீஸ்வரன் (வயது- 38) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் தனது உழவியந்திரத்தின் கீழே இறங்கி நின்றபோது உழவியந்திரம் திடீரென இயங்க ஆரம்பித்தது. இந்த நிலையில் நிலைகுலைந்த குறித்த குடும்பஸ்தர் கீழே விழுந்ததால் அவர்மீது உழவியந்திரத்தின் சக்கரம் ஏறியது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த குறித்த குடும்பஸ்தர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (எ- 05)

# ஒரு பரல் கசிப்புடன் ஒருவர் கைது!

வவுனியா, மே 09

வவுனியா பூவரசங்குளம் பொலிஸார் ஒரு பரல் கசிப்புடன் ஒருவரை கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாலிக்குளம் குளப்பகுதியில் வைத்து குறித்த நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 90 லீற்றர் அளவுகொண்ட ஒரு பரல் கசிப்பு மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ- 10)




# யாழ்ப்பாணத்தில் தச்சு தொழிலாளி பட்டறை வாள் வெட்டி உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணம் - ஏழாலை பகுதியில் நேற்று முன்தினம் தச்சுவேலை செய்துகொண்டிருந்த தொழிலாளி ஒருவர் பட்டறையின் வாள் வெட்டி உயிரிழந்தார்.

ஏழாலை பகுதி யைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெகாஸ் (வயது- 42) என்ப வரே இவ்வாறு உயிரிழந்தார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் தனது வேலைத்தலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது திடீரென அவரது நெஞ்சில் தச்சு பட்டறையின் வாள் வெட்டி படுகாயம் ஏற்பட்டது. இதனால், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டார்.

இருப்பினும், பலத்த காயம் காரணமாக அவர் உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரி சோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ- 05)

# வெற்றிக்கொண்டாட்டத்தில் தாக்குதல் யாழில் இருவர் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணத்தில் தேர்தல் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச் சாட்டில் கைதான இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு அறிவிக்கப்பட் டதை அடுத்து இணுவில் பகுதி யில், வெற்றி பெற்ற வேட்பாள ரின் ஆதரவாளர்கள் அப்பகுதியில் வெடி கொளுத்தி வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட் டனர்.

இதன்போது, தேர்தலில் தோல்வியுற்றவரும், அவரது சகோதரனும் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் தர்க்கப்பட்டு, தாக்குதல் நடத்தியதில் இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில், தேர்தலில் தோல்வியுற்றவரையும் அவரது சகோதரனையும் கைது செய்து நேற்று முன்தினம் புதன்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

சகோதரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணியின் பிணை விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட மன்று, இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்தது. (எ)

# காய்ச்சலால் இளைஞன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 09

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பகுதியில் நான்கு நாட்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த 21 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

இவர் கொழும்பில் உயர் கல்வி கற்று வந்தவர் என்றும், சமீபத்தில் யாழில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பியதும் நோயால் பாதிக்கப்பட்டதாக தெரியவந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை உடல் நிலை மோசமான நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவர் உயிரிழந்தார். (எ)

ஈழநாடு




# ஆட்சியமைக்க பெரும்பான்மை இல்லாதமை ஒரு தடையேயல்ல!

### தேர்தல் ஆணையாளர் நாயகம்

கொழும்பு, மே. 09

**சமீபத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில், நிர்வாகத்தை அமைக்க பெரும்பான்மை இல்லாதது ஒரு தடையல்ல என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார்.**



"எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத நிர்வாகத்தை அமைப்பதற்கு எந்தத் தடையும் இல்லை" என்று ரத்நாயக்க ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

"எல்பிட்டிய பிரதேச சபையில் நாம் கண்டது போல, சபைகள் ஒருமித்த கருத்துக்கு வரலாம் அல்லது வாக்களிப்பதன் மூலம் ஒரு மேயர் அல்லது தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம், அங்கு மற்ற கட்சிகளால் ஆதரிக்கப்பட்டது." என அவர் குறிப்பிட்டார்.

2025 உள்ளூராட்சித் தேர்தல்களில் வாக்காளர் எண்ணிக்கை குறித்த விசனங்களுக்குப் பதிலளித்த ரத்நாயக்க, 2018 வாக்கெடுப்புகளுடன் ஒப்பிடும்போது பங்கேற்பு குறைவாக இருப்பதாக ஒப்புக்கொண்டார்.

பொதுவாக மக்கள் உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்களிப்பதில் ஆர்வம் குறைவாக இருப்பது காணப்படுகிறது என்று அவர் கூறினார்.

2018 உள்ளூராட்சித் தேர்தல்கள் விதிவிலக்காக இருந்தன. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு 78 வீத வாக்குப்பதிவு இருந்தது. இந்த ஆண்டு, அது 55 முதல் 60 வீதம்வரை இருந்தது. இது சராசரி நிலை.

ஒரு சில தனிமைப்படுத்தப்பட்ட வன்முறை சம்பவங்கள் இருந்தபோதிலும், தேர்தல் பெரும்பாலும் அமைதியாக இருந்தது என்றும் ரத்நாயக்க குறிப்பிட்டார். (அ)

# பஸ்-லொறி விபத்து நான்கு பேர் காயம்!




கொழும்பு, மே. 09

தங்காலை - அம்பாந்தோட்டை பிரதான வீதியில் ரன்ன வாடிகல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளதாக ஹங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை காலை 07.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மாத்தறையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது பஸ்ஸில் பயணித்த நான்கு பேர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹங்கம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# உலக வங்கி தலைவர் பிரதமர் ஹரிணியுடன் பேச்சு



கொழும்பு, மே. 09

இலங்கையின் வளர்ச்சி முன்னுரிமைகள் மற்றும் மூலோபாய ஒத்துழைப்பைத் தொடர்வது குறித்து விவாதிப்பதற்காக பிரதமர் ஹரிணி அமரசூரிய, உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தார்.

இலங்கையின் சமீபத்திய பொருளாதார நெருக்கடியின் போது, உலக வங்கியின் ஆதரவுக்குப் பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

மேலும், உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சிக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

அரசாங்கத்தின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை பங்கா பாராட்டினார்.

மேலும் பொருளாதார மீட்சியின் முக்கிய இயக்கிகளாக வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வேலை வாய்ப்பு தரத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

சுகாதாரம், கல்வி, விவசாயம், சுற்றுலா மற்றும் உற்பத்தித் தொழில்கள் போன்ற முக்கியமான துறைகளில் முதலீடு செய்வது குறித்து விவாதங்கள் நடத்தப்பட்டன. முக்கிய துறைகளை குறிப்பாக விவசாயத்தை மாற்றுவதற்கு செயற்கை நுண்ணறிவின் திறனை பங்கா எடுத்துரைத்தார். மேலும் புதுமை மற்றும் உற்பத்தித்திறனுக்கான அதன் பயன்பாட்டை ஆராய இலங்கையை ஊக்குவித்தார். (அ)

# பாடசாலைக்கு அருகே மாணவியை கடத்திச் செல்ல முற்பட்ட நபர் கைது!

கொழும்பு, மே. 09

கொழும்பு கறுவாத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபல பாடசாலைக்கு அருகில் 8 வயது மாணவி ஒருவரைக் கடத்திச் செல்ல முற்பட்ட சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கறுவாத்தோட்டம் பிளவர் வீதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல், பாடசாலை நிறைவடைந்ததும் 8 வயதுடைய மாணவி ஒருவரை அழைத்துச் செல்ல அவருடைய தாயார் காரில் வருகை தந்தார். மாணவியை காரின் பின் இருக்கையில் அமர வைத்தபோது இனந்தெரியாத ஒருவர் வலுக்கட்டாயமாக காரின் பின் இருக்கையில் ஏறி அமர்ந்துகொண்டார். குறித்த நபர் மாணவியின் தாயை காரை முன்னோக்கிச் செலுத்துமாறு கட்டாயப்படுத்திய நிலையில்

காரில் இருந்து இறங்கிய தாய் அருகில் இருந்தவர்களிடம் உதவி கோரியுள்ளார். இதன்போது பாடசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வருவதை அவதானித்த சந்தேக நபர் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டிருந்த நிலையில் புதன்கிழமை மேற்படி சந்தேகநபர் கொலன்னாவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். (அ)

## மதுபானசாலைகள் 3 நாட்களுக்கு பூட்டு!

கொழும்பு, மே. 09

வெசாக் பண்டிகையை முன்னிட்டு மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படும் என்று கலால் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதன்படி, மே 12 முதல் மே 14 வரை 3 நாட்களுக்கு மதுபானக் கடைகள் மூடப்படும் என்று கலால் திணைக்களம் தெரிவித் துள்ளது.

அந்தவகையில், மே 11 ஆம் திகதி இரவு முதல் மே 15 ஆம் திகதி திட்டமிடப்பட்ட திறப்பு நேரம் வரை அனைத்து மதுபானக் கடைகளும் மூடப்படவேண்டும் என்று கலால் திணைக்கள ஆணையர் ஜெனரல் உதய குமார பெரேரா தெரிவித்தார். (அ)

# சிறையில் இருந்தவர் உயிரிழந்தமை எப்படி?

கொழும்பு, மே. 09

சமீபத்தில் விளக்கமறியல் சிறையில் இருந்தபோது இறந்த சந்தேக நபருக்கு சக கைதிகளுடன் பிரச்னைகள் இருந்ததாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீதிமன்ற அறைக்குள் தொலைபேசி ஒலித்ததை அடுத்து, நீதிமன்ற அவமதிப்புக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்ட இந்த நபருக்கு சக கைதிகளுடன் பிரச்னைகள் இருந்ததாக, பாராளுமன்ற உறுப்பினர் சித்ரல் பெர்னாண்டோ எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அமைச்சர் நாணயக்கார இதனைத் தெரிவித்தார்.

நீதிமன்ற அவமதிப்பு விவகாரம் குறித்து நீதித்துறை சேவை ஆணைக்குழு மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன்தற்போது தொடர்ந்து கலந்துரையாடி வருவதாக அமைச்சர் கூறினார். சந்தேக நபரின் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிய விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (அ)

# பாராளுமன்றத் தேர்தலை இப்போது நடத்திக் காட்டுக!

### தலதா அத்துக்கோரள அரசுக்கு சவால்

கொழும்பு, மே. 09

அரசாங்கம் பொதுத் தேர்தலில் பெற்றுக் கொண்ட வாக்குகளில் பெருந்தொகையை இழந்திருக்கிறது. சரியென்றால் இப்போதாவது அரசாங்கம் பதவி விலகவேண்டும். எனவே இப்போது பாராளுமன்றத் தேர்தலை நடத்திக் காண்பிக்குமாறு சவால் விடுப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாம் அனைத்து கட்சிகளுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம். அதன் பின்னரே தீர்மானமொன்று எடுக்கப்படும்.

அரசாங்கம் பொதுத் தேர்தலில் பெற்றுக் கொண்ட வாக்குகளில் பெருந் தொகையை இழந்திருக்கிறது. சரியென்றால் இப்போதாவது அரசாங்கம் பதவி விலகவேண்டும். அவர்களுக்கு மக்களிடம் வரவேற்பில்லை என்பது தற்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே இப்போது பாராளுமன்றத் தேர்தலை நடத்திக் காண்பிக்குமாறு சவால் விடுக்கின்றோம்.

அதனை விடுத்து அரசாங்கம் கூறுவதை செய்வதற்கு நாம் தயாராக இல்லை. எமது ஆதரவைக் கோரும் அனைத்து தரப்பினருடனும் பேச்சுக்களுக்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். ஐக்கிய மக்கள் சக்தி இதுவரை எம்மிடம் உத்தியோகபூர்வமாக ஆதரவைக் கோரவில்லை. அவர்கள் சபைகளை நிறுவுவதற்கு வாழ்த்துகின்றோம். பேச்சுக்கள் இன்றி எம்மால் எந்த தீர்மானத்துக்கும் வர முடியாது-என்றார். (அ)

# உள்ளூராட்சி சபைகளில் 25 வீதம் பெண் பிரதிநிதித்துவம் அவசியம்!

## பெண்கள் மற்றும் சிவில் அமைப்புகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம்

கொழும்பு, மே. 09

**உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம், உள்ளூராட்சிமன்றங்களில் 25 வீத பெண் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்படுவதை உறுதி செய்யவேண்டிய சட்ட ரீதியான கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது. எனவே ஒவ்வொரு உள்ளூராட்சிமன்றமும் இளம் பெண்கள் உள்ளடங்கலாக 25வீத பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதை தேர்தல்கள் ஆணைக்குழு இறுக்கமாக நடைமுறைப்படுத்தவேண்டும். அதிலிருந்து தவறும் அரசியல் கட்சிகள் பொறுப்புக் கூறச்செய்யப்படவேண்டும் என 34 பெண்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.**

இது குறித்து மன்னார் பெண்கள் அபிவிருத்திப் பேரவை, சமூக அபிவிருத்தி நிலையம், கிழக்கு சமூக அபிவிருத்தி நிதியம், பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு, முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நிதியம் என்பன உள்ளடங்கலாக 34 பெண்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் முடிவடைந்திருப்பதுடன் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் 25 வீத கட்டாய பிரதிநிதித்துவம் உறுதிப்படுத் தப்படவேண்டியதன் அவசியத்தை இது மீள நினைவூட்டியிருக்கிறது. இம்முறை தேர்தலில் வாக்களித்தோரின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும், பிரசாரம், வாக்களிப்பு, தேர்தலில் போட்டியிடல், போனஸ் ஆசனத்தில் பதிவு செய்யப்படல் என தேர்தல் செயன்முறையின் சகல கூறுகளிலும் பெண்கள் உத்வேகத்துடன் பங்கேற்றமையைக் காண முடிந்தது.

இதற்கு முன்னர் உள்ளூராட்சிமன்றங்களில் அங்கம்வகித்த அனுபவத்தைக் கொண்ட பெண்கள் பலர் இம்முறை கட்சிகளின் ஊடாகவோ, சுயேச்சையாகவோ போட்டியிட்டனர்.

அதேவேளை இத்தேர்தலில் அநேகமான பெண்கள் அதிகளவு வாக்குகளைப் பெற்றிருப்பதையும், மீண்டும் உள்ளூராட்சிமன்ற அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிருப்பதையும் அவதானிக்கமுடிகிறது.

உள்ளூராட்சிமன்றத்தேர்தல்கள் சட்டத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம், 25 வீத பெண் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்படுவதை உறுதி செய்யவேண்டிய சட்ட ரீதியான கடப்பாடு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருக்கிறது. இந்நிலையில் ஒவ்வொரு உள்ளூராட்சிமன்றமும் இளம் பெண்கள் உள்ளடங்கலாக 25 வீத பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதனை தேர்தல்கள் ஆணைக்குழு கட்டாயமாக நடைமுறைப்படுத்தவேண்டும்-என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# பேசுவதை குறைத்து அரசு செயலில் காட்டவேண்டும்!

## அலி சப்ரி ஆலோசனை



கொழும்பு, மே. 09

“ஊடகக் கண்காட்சியை“ நடத்துவதன் ஊடாக எப்போதும் நாட்டை ஆழமுடியும் என கருதியிருந்தால், அது முற்றிலும் தவறானதாகும். இலங்கையின் கடந்த கால அரசாங்கங்கள் அடுத்தடுத்து தோல்வி கண்டிருக்கும் நிலையில், மீண்டுமொரு தோல்வியடைந்த அரசாங்கத்தை எதிர்கொள்வதற்கு இலங்கைக்குத் திராணியில்லை. எனவே தற்போதைய அரசாங்கம் சிறப்பாக செயற்படவேண்டுமாயின், அவர்கள் பேசுவதைக் குறைத்து, அதனைச் செயலில் காண்பிக்கவேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தியுள்ளார்.

நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஆளும் தேசிய மக்கள் சக்தி தெற்கில் வெற்றி பெற்றிருந்தாலும், பல சபைகளில் ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மையைப் பெறத்தவறியிருக்கிறது. இந்நிலையில் தேர்தல் முடிவுகள் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அலி சப்ரி-

“ஊடகக் கண்காட்சியை“ நடத்துவதன் ஊடாக எப்போதும் நாட்டை ஆழமுடியும் என நீங்கள் கருதியிருந்தால், அது முற்றிலும் தவறானதாகும். நீங்கள் கூறும் விடயங்களுக்குச் செயல் வடிவம் கொடுப்பதன் ஊடாக வீதிகளில் இருக்கும் மக்களால் உணரக்கூடிய மாற்றத்தை உருவாக்குங்கள். சாதாரண மக்கள் மெச்சக்கூடியவகையில் சட்டம் மற்றும் ஒழுங்கு, செயற்திறன்மிக்க பொதுநிர்வாகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை நிலைநிறுத்துங்கள்.

இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் ஒரு அபாய எச்சரிக்கையாகும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ 18 மாதங்களில் பதவியை இராஜினாமா செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்-எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# 6 மாத காலத்தில் மக்களின் நம்பிக்கையை வென்றோம்

## சாகர காரியவசம் பெருமிதம்

கொழும்பு, மே. 09

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் பாரிய பின்னடைவை எதிர்க்கொண்டிருந்தோம். ஆனால் இந்த தேர்தலில் சுமார் 9 இலட்சத்து 54 ஆயிரம் வரையிலான வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளோம். 6 மாத காலத்துக்குள் மக்களின் நம்பிக்கையை வெற்றிக்கொண்டுள்ளோம் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பெறுபேறுகளின் பிரகாரம் பொதுஜன பெரமுன சிறந்த முறையில் வெற்றி பெற்றுள்ளது. இந்த நாட்டை பாதுகாத்தவர்கள் தான் இந்தக் கட்சியை நிர்வகிக்கிறார்கள். பொய் மற்றும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி மக்களின் சிந்தனையை திரிவுபடுத்தி தான் மக்கள் விடுதலை முன்னணி ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியது.

இந்த தேர்தலில் பொதுஜன பெரமுனதான் சவால்களுக்கு மத்தியில் வெற்றி பெற்றுள்ளது என்று மகிழ்வுடன் குறிப்பிடவேண்டும். கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் பாரிய பின்னடைவை எதிர்க்கொண்டிருந்தோம்.

ஆனால் இந்த தேர்தலில் சுமார் 9 இலட்சத்து 54 ஆயிரம் வரையிலான வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளோம். 6 மாத காலத்துக்குள் மக்களின் நம்பிக்கையை வெற்றி கொண்டுள்ளோம்-என்றார். (அ)

# 3 ஆண்டுகளில் 23 தடவைகள் பறந்த ரணில்!

கொழும்பு, மே. 09

2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் 23 தடவைகள் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு 14 தடவைகளும், 2023 ஆம் ஆண்டு 14 தடவைகளும், 2024 ஆம் ஆண்டு 05 தடவைகளும் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போது, ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை பதிலளிக்கும்போதே மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

இந்த விஜயங்களின்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 1.27 பில்லியன் செலவிட்டுள்ளதாக அரசாங்கத்தின் பிரதம கொறடா நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (அ)

# கடந்த ஏப்ரல் மாதம் மட்டும் 174,608 சுற்றுலா பயணிகள்!

கொழும்பு, மே. 09

நாட்டுக்கு கடந்த ஏப்ரல் மாதம் மட்டும் 1 இலட்சத்து 74 ஆயிரத்து 608 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளை விட 17.3 வீதம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மொத்தமாக 8 இலட்சத்து 96 ஆயிரத்து 884 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை வந்துள்ளனர். இது நாட்டின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு சிறந்த எடுத்து காட்டாகும்.

சர்வதேச சுற்றுலா சந்தையில் இலங்கையின் மீள் எழுச்சிக்கு உறுதியான அடையாளமாகவும் கருதப்படுகிறது.

இந்நிலையில், நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளில் இந்தியர்கள் தொடர்ந்து முன்னிலை வகிக்கின்றனர்.

குறிப்பாக, ஏப்ரல் மாதத்தில் மட்டும் 38 ஆயிரத்து 744 இந்திய சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளனர்.

தொடர்ந்து பிரித்தானியாவை சேர்ந்த 17 ஆயிரத்து 348 பேரும், ரஷ்யாவை சேர்ந்த 13 ஆயிரத்து 525 பேர் மற்றும் ஜேர்மனி நாட்டில் இருந்து 11 ஆயிரத்து 654 பேரும் சுற்றுலாப்பயணிகளாக வருகை தந்துள்ளனர்.

இந்நிலையில், சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்புக்கு பாதுகாப்பு சூழல், சிறந்த போக்குவரத்து வசதிகள் மற்றும் சர்வதேச விளம்பரப் படுத்தல் நடவடிக்கைகள் போன்றன முக்கிய பங்காற்றியுள்ளதாகவும், இந்த வளர்ச்சி, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# வடக்கு ரயில் மார்க்கத்தில் இரு வழிப் போக்குவரத்து!

கொழும்பு, மே. 09

வடக்கு ரயில் மார்க்கத்தின் பொல்கஹவெல மற்றும் மஹவ ரயில் நிலையத்திற்கு இடையிலான மார்க்கத்தை இருவழி போக்குவரத்தாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டத்தின் கீழ் பொல்கஹவெல மற்றும் குருநாகல் ரயில் நிலையங்களுக்கிடையிலான ரயில் மார்க்கத்தை இரு வழி மார்க்கமாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொலகே தெரிவித்தார். ரயில் போக்குவரத்து தாமதத்தை குறைக்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

# மியன்மார் சைபர் முகாம்களிலிருந்து மீட்கப்பட்ட 15 இலங்கையர் நாட்டுக்கு!

கொழும்பு, மே. 09

மியன்மார் சைபர் குற்ற முகாம்களில் இருந்து மீட்கப்பட்ட 15 இலங்கையர்கள் நேற்று முன் தினம் புதன்கிழமை நாடு திரும்பியுள்ளனர்.

இந்த 15 இலங்கையர்களும் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்திலிருந்து நேற்று முன் தினம் காலை 10.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சும் தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதரகமும் தாய்லாந்து அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொண்ட முயற்சியின் விளைவாக இந்த 15 இலங்கையர்களும் கடந்த செவ்வாய்க்கிழமை மியன்மார் சைபர் குற்ற முகாம்களில் இருந்து மீட்கப்பட்டனர்.

மியன்மார் சைபர் குற்ற முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர்களில் 14 பேர் கடந்த மார்ச் 18 ஆம் திகதியும், 27 பேர் கடந்த 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் 17 திகதியும் நாட்டு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொழும்பு மாநகர அதிகாரத்தை கைப்பற்ற சஜித் தரப்புக்கு ஆதரவு

## ருவான் விஜேவர்த்தன அறிவிப்பு

கொழும்பு, மே. 09

கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு உதவத் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் ருவான் விஜேவர்த்தன இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்ற ஐக்கிய மக்கள் சக்திக்கு எமது உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக் கொடுக்கத் தயாராகவே உள்ளோம்.

எனினும், அது தொடர்பில் இதுவரை எதுவித வேண்டுகோளும் விடுக்கப்படவில்லை.

அதே போன்று நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் ஒன்றிணைந்து அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய இடங்களில் அதற்கான ஆதரவை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே உள்ளது-என்றார். (அ)

# மின்சாரக் கட்டண திருத்தம் விரைவில்!

## அடுத்த வாரத்தில் முன்மொழிவு

கொழும்பு, மே. 09

**இந்த வருடத்துக்கான இரண்டாவது மின்சார கட்டணத் திருத்தம் தொடர்பான முன்மொழிவுகளை இலங்கை மின்சார சபை எதிர்வரும் வாரத்துக்குள் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் மின்சாரக் கட்டணங்களில் திருத்தம் ஏற்பட்டால், அதற்கான முன்மொழிவுகள் மே மாதத்தில் ஆணையகத்திடம் பெறப்படவேண்டும் என்று ஆணைக்குழுவின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத் குறிப்பிட்டார்.

மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பான முன்மொழிவுகளைப் பெற்ற பின்னர், ஆணைக்குழு 3 முதல் 6 வாரங்களுக்குள் முன்மொழிவுகளை ஆய்வு செய்து அதன் முடிவை அறிவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்தக் காலகட்டத்தில், தொடர்புடைய திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்துக்களும் கேட்கப்படும்.

சர்வதேச நாணய நிதியம் மின்சாரக் கட்டணங்களை திருத்துமாறு கோரியுள்ளது.

அதன்படி, எதிர்காலத்தில் மின்சாரக் கட்டணங்கள் திருத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இருப்பினும், இலங்கை மின்சார சபை இதுவரை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் பொருத்தமான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் முதலில் மின்சாரக் கட்டண திருத்தம் ஜனவரி 17 ஆம் திகதி நடைபெற்றது.

அப்போது பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மின்சாரக் கட்டணங்களை 20 வீதம் குறைக்க முடிவு செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டின் கையிருப்பு வீழ்ச்சி!

கொழும்பு, மே. 09

**இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் 2025 ஏப்ரல் மாதத்தில் 3 வீதம் குறைவடைந்து 6.32 பில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி** தெரிவித்துள்ளது.

இது மார்ச் 2025 இல் 6.53 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்ததிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# கொட்டாஞ்சேனை மாணவி மரணம் ஆசிரியருக்கு தண்டனை வழங்குக!

## வலியுறுத்தி கொழும்பில் போராட்டம்




கொழும்பு, மே. 09

கொழும்பு- கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த மாணவி, தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் தொடர்பாக நேற்று காலை கொழும்பு கொச்சிக்கடை விவேகானந்தா வீதிக்கு முன்பாக அமைதியான முறையில் கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை கொழும்பு கொச்சிக்கடை விவேகானந்தா வீதிக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் கொட்டாஞ்சேனை இராஜேஸ்வரி கல்விக்கூடம் வரை முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள பிரபல தமிழ் பாடசாலையொன்றில் தரம் 11 இல் கல்விக் கற்றுவந்த மாணவி ஒருவர் கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் 7ஆவது மாடியில் இருந்து கீழே பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாணவி கல்வி கற்றுவந்த பாடசாலையில் கற்பித்த கணித பாட ஆசிரியர் குறித்த மாணவியை பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கியுள்ளதாக பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பாக பாடசாலை நிர்வாகத்திடம் முறையிட்டபோதும் பாடசாலை நிர்வாகம் மாணவியின் மீது போலியாக மனநிலை சரியில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து கணிதபாட ஆசிரியரைப் பாதுகாத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் நேற்று கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், சமயத் தலைவர்கள், அரசியல்வாதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் 12 பேர் காயம்!

கொழும்பு, மே. 09

மாத்தறை-அக்குரஸ்ஸ பிரதான வீதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பலட்டுவ வெளியேறும் இடத்துக்கு அருகில், வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொள்கலன் லொறியுடன் வான் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வானில் இருந்த பயணிகள் மாத்தறை, முலட்டியானாவைச் சேர்ந்தவர்கள் என்றும், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு ஒரு பயணம் மேற்கொண்ட பின்னர் திரும்பிக் கொண்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990 சுவ செரிய அம்புலன்ஸ் சேவையைப் பயன்படுத்தி காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உள்ளூர்வாசிகளும் பொலிஸாரும் உடனடியாக செயற்பட்டனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சகல எதிர்க்கட்சிகளுடனும் சேர்ந்து 170 சபைகளை அமைப்பதற்கு தயார்!

## துமிந்த திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, மே. 09

அரசாங்கம் பெற்றுக் கொண்ட வாக்குகள் வெறும் இலக்கங்களாக மாத்திரமே உள்ளன எனவும் சகல எதிர்க் கட்சிகளுடனும் இணைந்து 170 உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதற்கு தயார் எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துதார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கம் கூறுவது பொய் என்பது தமக்கு தெரியும் என்பதை மக்கள் இந்த தேர்தலில் உணர வைத்திருக்கின்றனர்.

பாராளுமன்றத்தில் 159 பெரும்பான்மையைக் கொண்டுள்ள இந்த அரசாங்கத்துக்கு மக்கள் இந்தச் செய்தியை வழங்கியிருக்காவிட்டால் அடுத்த 4 ஆண்டுகளுக்கும் இவர்களின் பொய்கள் தொடர்ந்திருக்கும்.

எவ்வாறிருப்பினும் மக்கள் அதற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றனர்.

தற்போது அரசாங்கம் பெற்றுக்கொண்ட வாக்குகள் வெறும் இலக்கங்களாக மாத்திரமே உள்ளன.

அதிகாரம் எதிர்க்கட்சிகளிடமே உண்டு.164 உள்ளூராட்சி மன்றங்களில் மாத்திரமே அரசாங்கத்துக்கு ஆட்சியமைக்க முடியும்.

170 மன்றங்களில் அரசாங்கத்தால் ஆட்சியமைக்க முடியாது.

ஜனாதிபதியும், பிரதமரும் மக்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தனர். அவை நடைமுறையில் சாத்தியப்படவில்லை.

ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வா வேறு எந்த கட்சிகளின் ஆதரவும் தமக்கு தேவையில்லை என குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் கோரினாலும் ஆதரவளிப்பதற்கு நாம் தயாராக இல்லை என்பதை ரில்வின் சில்வாவிடம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொய் கூறி மக்களை ஏமாற்றும் உங்களுடன் இணைய வேண்டிய தேவை எமக்கில்லை.

ஆனால் கட்சி பேதங்களை மறந்து சகல எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து 170 உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதற்கு நாம் தயார்.

ஆர்ப்பாட்டத்தின் மூலம் கோட்டாபய ராஜபக்ஷவை துரத்தியதைப் போன்று ஆட்சியைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல.

அரசாங்கம் அதன் தவறுகளை திருத்திக் கொண்டு ஆட்சியை முன்னெடுக்கவேண்டும்-என்றார். (அ)

# பாராளுமன்ற உறுப்பினராக சமந்த ரணசிங்க பதவியேற்பு

கொழும்பு, மே. 09

கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக சமந்த ரணசிங்க, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

கோசல நுவான் ஜயவீர கடந்த ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி காலமான நிலையில் ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கே சமந்த ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராக சமந்த ரணசிங்க பதவியேற்றுள்ளார்.

சமந்த ரணசிங்க 2024 பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ரம்புக்கனை தேர்தல் அமைப்பாளராகப் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மட்டக்களப்பு, திருமலையில் தமிழ் அரசுக் கட்சி ஆதிக்கம்

மட்டக்களப்பு, மே 09

**கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மற்றும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய கட்சிகள் அதிக ஆசனங்களை கைப்பற்றியுள்ள நிலையில், திருகோணமலையில் தமிழ் அரசுக் கட்சி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன அதிக ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.**

அதேபோன்று அம்பாறையில் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் அரசுக் கட்சி ஆகியன தமிழ் பேசும் பகுதிகளில் ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.

எனினும், திருகோணமலை, அம்பாறையின் சிங்களப் பகுதிகளில் தேசிய மக்கள் சக்தியே ஆதிக்கம் செலுத்தியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியும் சபையொன்றைக் கைப்பற்றியுள்ளது.

கிழக்கு மாகாணத்திலும் பல்வேறு சபைகளிலும் ஆட்சி அமைப்பதில் அறுதிப்பெரும்பான்மை இன்மையால் இழுபறியான நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளின் பிரகாரம் கட்சிகளின் நிலைமைகள் வருமாறு,

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு மாநகர சபையில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி 16 ஆசனங்களையும், ஏறாவூர் பற்று பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சி 13 ஆசனங்களையும் கோரளைப் பற்று பிரதேச சபையில் தமிழ் அரசுக்கட்சி 10 ஆசனங்களையும், மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபையில் தமிழ் அரசுக்கட்சி 8ஆசனங்களையும், மண்முனை பற்று பிரதேச சபையில் தமிழ் அரசுக்கட்சி 6 ஆசனங்களையும் மண்முனை மேற்கு பிரதேச சபையில் தமிழ் அரசுக்கட்சி 10ஆசனங்களையும் மண்முனை தென்மேற்கு பிரதேச சபையில் தமிழ் அரசுக்கட்சி 6 ஆசனங்களையும் போரதீவு பற்று பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சி 8 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

தமிழ் அரசுக்கட்சி மண்முனைப் மேற்கு பிரதேச சபையில் மாத்திரம் அறுதிப்பெரும்பான்மையைப் பெற்றுள்ளதோடு ஏனைய சபைகளில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் ஒத்துழைப்புடனேயே ஆட்சி அமைக்கும் நிலைமைகள் காணப்படுகின்றன.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் காத்தான்குடி நகரசபையில் அறுதிப்பெரும்பான்மையுடன் 10ஆசனங்களை கைப்பற்றியுள்ளதோடு ஏறாவூர் பற்று பிரதேச சபையில் 7ஆசனங்களைப் பெற்றுள்ளது.

கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி 7ஆசனங்களைப் பெற்றுள்ளதோடு அந்தக் கட்சி ஏனைய அனைத்து சபைகளிலும் ஆசனங்களைப் பெற்றுக்கொண்டு தீர்மானிக்கும் சக்தியாக காணப்படுகின்றது.

கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தி 8ஆசனங்களைப் பெற்றுள்ளபோதும் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையைக் கொண்டிருக்கவில்லை.

இந்த நிலையில் முன்னிலை பெற்றுள்ள தரப்பினர்கள் ஏனைய தரப்பினருடன் கூட்டிணைந்து ஆட்சி அமைப்பதற்குரிய பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் அக்கறைப்பற்று மாநகரசபை, அக்கரைப்பற்று பிரதேச சபை ஆகியவற்றை தேசிய காங்கிரஸ் கைப்பற்றியுள்ளதோடு சம்மாந்துறை பிரதேச சபையையும், நிந்தவூர் பிரதேச சபையையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அம்பாறை நகரசபையிலும், தெஹியத்தகண்டிய பிரதேச சபையிலும், தமன பிரதேச சபையிலும், உஹன பிரதேச சபையிலும், மஹா ஓயா பிரதேச சபையிலும், நமலோயா பிரதேச சபையிலும், பதியத்தலாவ பிரதேச சபையிலும் லகுகல பிரதேச சபையிலும் ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.

தமிழ் அரசுக் கட்சி நாவிதன்வெளி பிரதேச சபையிலும், ஆலையடிவேம்பு பிரதேச சபையிலும், காரைதீவு பிரதேச சபையிலும் ஆசனங்களை பெற்றுள்ளதோடு முஸ்லிம் காங்கிரஸ் இறக்காமம் பிரதேச சபையிலும், பொத்துவில் பிரதேச சபையிலும், அட்டளைச்சேனை பிரதேச சபையிலும் திருக்கோவில் பிரதேச சபையில் சுயேச்சைக்குழு ஒன்றும் ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.

எனினும் இந்த சபைகளிலும் கூட்டணிகளை அமைப்பதன் மூலமே ஆட்சியை அமைத்துக் கொள்ளக்கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன.

அத்தோடு, தமிழ் அரசுக் கட்சி திருகோணமலை மாநகரசபையில் 9ஆசனங்களையும், வெருகல் பிரதேச சபையில் 8ஆசனங்களையும் திருகோணமலை நகர சபையில் 6ஆசனங்களையும் மூதூர் பிரதேச சபையில் 5ஆசனங்களையும் பெற்றுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கிண்ணியா நகரசபையில் மட்டும் 4 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

தேசிய மக்கள் சக்தி சேருவில பிரதேச சபையில் 7ஆசனங்களையும் கந்தளாய் பிரதேச சபையில் 10 ஆசனங்களையும் மொரவெவ பிரதேச சபையில் 9ஆசனங்களையும் கோமரன் கடவல பிரதேச சபையில் 9 ஆசனங்களையும் பதவிசிறீபுர பிரதேச சபையில் 9ஆசனங்களையும் தம்பலகமுவ பிரதேச சபையில் 3 ஆசனங்களையும் பெற்றுள்ளது. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குச்சவெளி பிரதேச சபையில் 5ஆசனங்களையும், கிண்ணியா பிரதேச சபையில் 5ஆசனங்களையும் பெற்றுள்ளது. (எ)

# காற்றுடன் கூடிய மழையால் மரம் வீழ்ந்து வீட்டுக்கு சேதம்

திருகோணமலை, மே 09

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவின் நடுப்பிரப்பந்திடல் பகுதியில் வீடொன்றின் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் சேதம் ஏற்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை கன மழையுடன் கூடிய காற்றால் குறித்த மரம் வீட்டின் மீது விழுந்ததில் சேதம் ஏற் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால்,

வீட்டு உபகரணங்கள் உட்பட பல பொருட்களும் சேதமடைந்தன. வீட்டு கூரையுடனான கட்டடம் பகுதியள வில் உடைந்து வீழ்ந் ததாகவும் தெரியவந்துள்ளது . (எ)

# குடிமனைக்குள் புகுந்த முதலையால் பரபரப்பு



மட்டக்களப்பு, மே 09

மட்டக்களப்பு மாவட்டம், சின்ன ஊறணி பிரதேசத்தில் உள்ள குடிமனை பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை 6 அடி நீளமுடைய முதலை ஒன்று புகுந்து பரபரப்பை ஏற்படுத்தியது.

பிரதேச மக்கள் இணைந்து முதலையை பிடித்தனர்.

பின்னர், அவர்கள் உடனடியாக வனஜீவராசிகள் திணைக்களத்தை தொடர்புகொண்டு முதலையை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பில் குடிமனைப் பகுதிகளுக்குள் முதலைகள் புகுந்து வருகின்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. (எ)

# “நிரந்தர அரசியல் தீர்வுக்கு தமிழர்கள் மீண்டும் ஆணை”

மட்டக்களப்பு, மே 09

நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை அடைய வேண்டுமென்ற எங்களுடைய இலக்கிற்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணையை தந்திருக்கிறார்கள் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“நாடு யாரிடமாவது இருக்கட்டும், தமிழர் தாயகம் தமிழரசோடு என்பது நாங்கள் தேர்தல் பரப்புரை காலத்தில் சொன்னதற்கமைய வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற மக்கள் எங்களுக்கு அமோகமான வெற்றியைத் தந்திருக்கின்றார்கள். இது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வெற்றி என்பதைத் தாண்டி இது தமிழர்களுடைய எதிர்காலத்துக்கான ஆணையொன்றை தமிழ் மக்கள் தமிழ் அரசுக் கட்சியிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

அந்த வகையில் விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்று நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கில் நாங்கள் கூடுதலான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்க இருக்கிறோம்”- என்றார். (எ)

# அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பை சரியானவர்களிடம் கொடுங்கள்

## புலம்பெயர் மக்களிடம் சிறிநேசன் எம். பி. கோரிக்கை

மட்டக்களப்பு, மே 09

விமர்சனங்களோடு மாத்திரம் நின்றுவிடாமல் எமது பிரதேசங்களில் அபிவிருத்தி குன்றிக் காணப்படுகின்ற இடங்களில் கல்விசார் அபிவிருத்திகள், பௌதீக வளம் சார்ந்த செயல்பாடுகள் போன்றவற்றை முன்னெடுக்குமிடத்தில் அதற்கான பொறுப்பை சரியானவர்களிடம் கொடுக்கின்றபோது, அவர்கள் வீண்விரயம் இன்றி அபிவிருத்திப் பணிகளை அந்தந்த பிரதேசங்களில் செய்வர் என்பதை புலம்பெயர் மக்களிடம் நான் கூறிக்கொள்கிறேன் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு செட்டிப்பாளையத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“மட்டக்களப்பில் காணப்படுகின்ற 12 உள்ளூராட்சி சபைகளில் 9 சபைகள் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களாக காணப்படுகின்றன. 3 உள்ளூராட்சி சபைகள் முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற சபைகளாக காணப்படுகின்றன.

தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற உள்ளூராட்சி சபைகளில் தேர்தல் முடிவுகளின் பிரகாரம், தமிழ் அரசு கட்சி ஆட்சியமைக்கக்கூடிய நிலைமை காணப்படுகிறது.

சர்ச்சைக்குரிய இந்த பிரதிநிதித்துவ முறையின் கீழ் வட்டார முறை தெரிவு, விகிதாசார தெரிவு, அத்தோடு தொங்கு நிலையான நிலைமையும் சில இடங்களில் காணப்படுகின்றன.

வவுணதீவு பிரதேசத்தில் அமைந்துள்ள 10 வட்டாரங்களையும் தமிழ் அரசு கட்சி வென்றுள்ளது. அதேபோன்று,



வாழைச்சேனை பிரதேசத்தில் அமைந்துள்ள 10 தமிழ் வட்டாரங்களையும் தமிழ் அரசு கட்சி வென்றுள்ளது.

செங்கலடி பிரதேசத்தில் காணப்படுகின்ற 14 வட்டாரங்களில் 13 வட்டாரங்களை எமது கட்சி வெற்றி கொண்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையில் 20 வட்டாரங்களில் 16 வட்டாரங்களை எமது கட்சி வென்றுள்ளது.

மண்முனை பற்று பிரதேசத்தில் தமிழ் மக்கள் வாழ்கின்ற 8 வட்டாரங்களில் 6 வட்டாரங்களை எமது கட்சி வென்று வெற்றிவாகை சூடியுள்ளது.

அதேபோன்று, பத்துக்கு ஏழு, பத்து எட்டு, பத்துக்கு ஆறு, பத்து ஐந்து என்ற அடிப்படையில் எமது கட்சி ஏனைய உள்ளூராட்சி சபைகளில் வெற்றிவாகை சூடியிருக்கின்றது.

ஒட்டுமொத்தமாக பார்க்கிறபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் அரசு கட்சி முன்னிலையில் காணப்படுகிறது. அதுபோன்று அதிகளவான ஆசனங்களை மட்டக்களப்பில் தமிழ் அரசு கட்சி பெற்றிருக்கிறது. எனவே, ஒட்டுமொத்தமாக பார்க்கிறபோது நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் அரசு கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றி பெற்றிருக்கிறது.

அதுபோன்று யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, அம்பாறை போன்ற பிரதேசங்களிலும் எமது தமிழ் அரசு கட்சி அதிகளவான ஆசனங்களை பெற்றிருக்கிறது.”- என்றார். (எ)

# இந்தியா நடத்திய தாக்குதலில் பாகிஸ்தானில் 31 பேர் மரணம்

லாகூர், மே 09

**பாகிஸ்தான் மீது இந்தியா நடத்திய தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்தது.**

காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் பகுதியில் கடந்த மாதம் 22ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்ட லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான "தி ரெசிஸ்டண்ட் பிரண்ட்" பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா நேற்று முன்தினம் அதிரடித் தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர், பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஒப்ரேஷன் சிந்தூர் என்று பெயரிடப்பட்ட இந்தத் தாக்குதலால் இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது. மேலும், இந்தத் தாக்குதலில் 46 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்துள்ளார். (எ)

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலால் காஸாவில் 61 பேர் உயிரிழப்பு!

காஸா, மே 09

காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 61 பேர் உயிரிழந்தனர்.

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காஸா முனையில் அதிரடித் தாக்குதல் நடத்தி வருகிறது. இதேவேளை, பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டது.

இந்த நிலையில், காஸா முனையில் இஸ்ரேல் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 61 பேர் உயிரிழந்தனர். இதில், ஹமாஸ் போராளிகளும் அடக்கம் என தகவல் வெளியாகியுள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரில் காஸாவில் ஹமாஸ் அமைப்பினர் உட்பட இதுவரை 52 ஆயிரத்து 600இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

(எ)

# புதிய போப் தெரிவாகவில்லை

வத்திக்கான், மே 09

புதிய போப் தெரிவு செய்யப்படவில்லை என்பதை வெளிப்படுத்தும் வகையில் புகைபோக்கியிலிருந்து கரும்புகை வெளியேற்றப்பட்டது.

உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்கர்களின் தலைவரான போப் பிரான்சிஸ் கடந்த மாதம் 21ஆம் திகதி உடல் நலக் குறைவால் காலமானார்.

இந்த நிலையில், புதிய பாப்பரசரை தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டன. இதற்காக உலகமெங்கிலும் இருந்து வாடிகனில் குவிந்திருந்த கார்டினல் எனப்படும் கர்தினால்கள் அடுத்தடுத்து சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

மேலும், புதிய பாப்பரசரை தெரிவு செய்வதற்கான கார்டினல் கான்கிளேவ் (கர்தினால் மாநாடு) நடைபெறும் சிஸ்டைன் சிற்றாலயத்தில் முன்னேற்பாடு பணிகளும் நடந்தன. இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் சிஸ்டைன் சிற்றாலயத்தில் கார்டினல் கான்கிளேவ் தொடங்கியது. இதில் 80 வயதுக்கு உட்பட்ட 133 கார்டினல்கள் கூடினர்.

புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்படும் வரை அவர்கள் அங்கேயே தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அதிகாரபூர்வ இல்லமான அப்போஸ்தலிக் அரண்மனையில் உள்ள சிஸ்டைன் சேப்பலில், 80 வயதுக்குட்பட்ட அனைத்து கார்டினல்களும் இரகசிய வாக்கெடுப்பில் பங்கேற்றனர். நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில், புதிய போப் தெரிவு செய்யப்படவில்லை. அதை குறிக்கும் வகையில் நேற்று முன்தினம் இரவு 09.05 மணிக்கு புகைபோக்கியிலிருந்து கரும்புகை வெளியேற்றப்பட்டது.

(எ)

# வீடுகளை விட்டு வெளியேறி மலையில் தஞ்சமடைந்த மக்கள்


## பாகிஸ்தானில் தொடரும் பதற்றம்

புதுடில்லி, மே 09

பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தானில் உள்ள 4 இடங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 5 இடங்களில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது இந்திய பாதுகாப்புப் படை தாக்குதல் நடத்தியது. அப்போது, வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடையுமாறு முஸாபராபாத் பகுதியில் உள்ள மசூதி ஒலிபெருக்கிகள் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதாக உள்ளூர் மக்கள் தெரிவித்தனர்.

"வெடி சத்தம் கேட்டு வீட்டை விட்டு வெளியே வந்தோம். அப்போது, மீண்டும் குண்டு வெடித்தது. இதனால் அச்சமடைந்த நாங்கள், குழந்தைகளுடன் வீட்டைவிட்டு வெளியேறி மலைப்பகுதிக்குச் சென்றோம்"- என்றனர்.

இதேவேளை, பஹல்காமில் நமது அப்பாவி சகோதரர்களை கொன்றதற்கான பாரதத்தின் பதிலடிதான் ஒப்ரேஷன் சிந்தூர் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார்.



இதுகுறித்து 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

நமது ஆயுதப் படைகள் குறித்து பெருமை கொள்கிறேன். பஹல்காமில் நமது அப்பாவி சகோதரர்களை கொடூரமாக கொன்றதற்கான பாரதத்தின் பதிலடிதான் ஒப்ரேஷன் சிந்தூர். இந்தியா மற்றும் அதன் மக்கள் மீது நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலுக்கும் தக்க பதிலடி கொடுக்க மோடி அரசு உறுதி பூண்டுள்ளது. தீவிரவாதத்தை வேருடன் ஒழிப்பதில் பாரதம் உறுதியாக உள்ளது- இவ்வாறு அமித் ஷா கூறியுள்ளார்.

ஒப்ரேஷன் சிந்தூர் தாக்குதல் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்படும் தீவிரவாத முகாம்களை குறிவைத்து இந்தியாவின் முப்படைகள் ஒருங்கிணைந்து 'ஒப்ரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் தாக்குதல் நடத்தின. இதில் லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது ஆகிய தீவிரவாத முகாம்கள் சேதமடைந்தன. இது தொடர்பான பல்வேறு வீடியோ காட்சிகள் சமூக வலைத்தலங்களில் வேகமாக பகிரப்பட்டு வருகின்றன.

(எ)

# தஜிகிஸ்தானில் நிலநடுக்கம்

துசான்பே, மே 09

தஜிகிஸ்தானில் நேற்றுக் காலை 08. 25 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4. 4 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்த வித தகவலும் வெளியாகவில்லை.

# இஸ்ரேல் - சிரியா இடையே அமைதிப் பேச்சு ஆரம்பம்

டமாஸ்கஸ், மே 09

இஸ்ரேல் - சிரியா இடையே பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. இந்த நிலையில், மூன்றாம் நாட்டின் மத்தியஸ்தம் மூலம் இஸ்ரேலுடன் மறைமுக பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக சிரியா ஜனாதிபதி ஹயத் தஹிர் அல் ஷியாம் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் அல் ஆஷாத் தலைமையிலான அரசு கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கவிழ்ந்தது. ஜனாதிபதியாக இருந்த அல் ஆஷாத் ரஷ்யாவுக்கு தப்பிச்சென்றார். இதையடுத்து, சிரியாவில் ஆட்சியைக் கைப்பற்றிய ஹயத் தஹிர் அல் ஷியாம் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி அல் ஆஷாத்தின் ஆதரவாளர்கள் குழுக்களாக சேர்ந்து சிரியா அரசுக்கு எதிராக கிளர்ச்சி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், சிரியா அரசுப்படைகள் மீதும் இந்த கிளர்ச்சிக்குழுக்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனிடையே, கடந்த சில நாட்களாக சிரியாவில் இரு தரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. தலைநகர் டமாஸ்கஸில் சன்னி பிரிவினருக்கும், டுரூஸ் மதத்தை சேர்ந்தவர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. இந்த மோதலில் 30றஇற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். டுரூஸ் மதத்தினர் இஸ்ரேலிலும் வசித்து வரும் நிலையில் அவர்களுக்கு ஆதரவாக சிரியா மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், இஸ்ரேல், சிரியா இடையே பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.



இந்த நிலையில் பதற்றத்தை தணிக்கும் வகையில் இஸ்ரேலுடன் சிரியா பேச்சுக்களில் ஈடுபட்டு வருகிறது. மூன்றாம் நாட்டின் மத்தியஸ்தம் மூலம் இஸ்ரேலுடன் மறைமுக பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக சிரியா ஜனாதிபதி ஹயத் தஹிர் அல் ஷியாம் தெரிவித்துள்ளார். சிரியாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலை முடிவுக்கு கொண்டுவர இந்த பேச்சுக்கள் நடத்தப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.


(எ)

# இந்தியா- பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் வகிக்கத் தயார்!

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், மே 09

இந்தியா - பாகிஸ்தான் இடையே மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.



இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது. ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் பயங்கரவாதிகள் 70 பேர் கொல்லப்பட்டனர் என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் டொனால்ட் ட்ரம்ப் கூறுகையில், ஒப்ரேஷன் சிந்தூர் என்ற இந்தியாவின் தாக்குதல் நடவடிக்கைக்கு பதிலடி கொடுப்போம் என்று பாகிஸ்தான் கூறியுள்ளது. இதனால், இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது. இருநாடுகளும் மோதலை அதிகரிக்கக் கூடாது. எனவே, மத்தியஸ்தம் செய்ய நாம் தயாராகவுள்ளோம்- என்றார்.

(எ)

ஈழநாடு



# கொல்கத்தாவை வீழ்த்தி சென்னை அபார வெற்றி

கொல்கத்தா, மே 09


கொல்கத்தாவை வீழ்த்தி சென்னை அபார வெற்றி பெற்றது.

நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இந்த வகையில் நேற்று முன்தினம் கொல்கத்தாவில் நடைபெற்ற 57ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 179 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் தலைவர் ரஹானே 48 ஓட்டங்களும், ரஸல் 38 ஓட்டங்களும், மணீஷ் பாண்டே 36 ஓட்டங்களும் சேர்த்தனர். சென்னை தரப்பில் நூர் அகமது அதிகபட்சமாக 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதையடுத்து, 173 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை அணி களமிறங்கியது. தொடக்க வீரர்களான ஆயுஷ், கான்வே ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினர். அடுத்து வந்த உர்வில் பட்டேல் 11 பந்துகளில் 31 ஓட்டங்கள் குவித்தார். அடுத்து களமிறங்கிய அஸ்வின் 8 ஓட்டங்களிலும், ஜடேஜா 19 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். பின்னர் களமிறங்கிய பிரேவிஸ், துபே ஜோடி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பிரேவிஸ் 25 பந்துகளில் 52 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். பொறுப்புடன் ஆடிய துபே 40 பந்துகளில் 45 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

இறுதியில் சென்னை சுப்பர் கிங்ஸ் 19.4 ஓவரில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 183 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் கொல்கத்தாவை 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சென்னை அபார வெற்றிபெற்றது. டோனி 17 ஓட்டங்களுடனும், கம்போஜ் 4 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். கொல்கத்தா தரப்பில் ஹர்ஷித் ராஸா, வருண் சக்கரவர்த்தி தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். (எ)





# டோனி புதிய சாதனை


கொல்கத்தா, மே 09

விக்கெட் காப்பாளராக 200 பேரை ஆட்டமிழக்கச் செய்து எம். எஸ். டோனி புதிய சாதனை படைத்துள்ளார்.

கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் சென்னை - கொல்கத்தா அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முன்னதாக, இந்த ஆட்டத்தில் சென்னை அணியின் விக்கெட் காப்பாளர் எம். எஸ். டோனி, சுனில் நரைனை ஸ்டம்பிங் முறையில் ஆட்டமிழக்கச் செய்தார். இதேபோல் ரகுவன்ஷி அடித்த பந்தையும் பிடியெடுத்தார். இதையும் சேர்த்து விக்கெட் காப்பாளராக 153 பிடியெடுப்புகள், 47 ஸ்டம்பிங் என மொத்தம் 200 பேரை ஆட்டமிழக்கச் செய்திருக்கிறார். இந்த மைல்கல்லை எட்டிய முதல் விக்கெட் காப்பாளர் என்ற சிறப்பை எம். எஸ். டோனி பெற்றுள்ளார். 2ஆவது இடத்தில் தினேஷ் கார்த்திக் (174) உள்ளார். (எ)






# ஓய்வு குறித்து இப்போதைக்கு எந்த முடிவும் எடுக்கவில்லை

## எம். எஸ். டோனி தெரிவிப்பு

கொல்கத்தா, மே 09

ஓய்வு குறித்து இப்போதைக்கு எந்த முடிவும் எடுக்கவில்லை என்று எம். எஸ். டோனி தெரிவித்தார்.

நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் கொல்கத்தாவை 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சென்னை அபார வெற்றி பெற்றது.


வெற்றிக்குப்பின் சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் எம். எஸ். டோனியிடன் ஓய்வு குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அந்தக் கேள்விக்கு பதிலளித்த டோனி, “எனக்கு இப்போது 43 வயது ஆகிறது. நான் நீண்ட நாட்கள் கிரிக்கெட் விளையாடிவிட்டேன். ஐ.பி.எல். தொடரில் எனது கடைசி ஆண்டு எது என்று யாருக்கும் தெரியாது. நான் ஆண்டுக்கு 2 மாதங்கள் மட்டுமே விளையாடுகிறேன். இந்த ஐ.பி.எல். சீசன் முடிந்தவுடன் அடுத்த 8 மாதங்களுக்கு எனது உடல் இந்த அழுத்தத்தை தாங்குகிறதா? என்பதை பார்க்க வேண்டும். ஓய்வு குறித்து இப்போதைக்கு எந்த முடிவும் நான் எடுக்கவில்லை. எல்லா இடங்களிலும் கிடைக்கும் ரசிகர்கள் அன்பு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது”- -என்றார். (எ)

# டெஸ்ட் போட்டிகளில் ரோஹித் சர்மா ஓய்வு

புதுடில்லி, மே 09

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா ஓய்வு பெற்றுள்ளார். ஏற்கனவே சர்வதேச ரி - 20 போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ள ரோஹித் சர்மா ஒருநாள் போட்டிகளில் மட்டும் விளையாடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

ரோஹித் சர்மா இந்திய அணிக்காக 67 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 4301 ஓட்டங்கள் அடித்துள்ளார். இதில், 12 சதங்களும், 18 அரைச்சதங்களும் அடங்கும். (எ)



# மும்பைக்கு அபராதம்



மும்பை, மே 09

மும்பை அணிக்கு ஐ.பி.எல். நிர்வாகம் அபராதம் விதித்துள்ளது.

ஐ.பி.எல். தொடரில் மும்பையில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாட்டம் செய்த மும்பை 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 155 ஓட்டங்கள் எடுத்தது. தொடர்ந்து 156 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் களம் கண்டது. இறுதியில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் திரில் வெற்றி பெற்றது.

இந்த நிலையில் மும்பை அணிக்கு ஐ.பி.எல். நிர்வாகம் அபராதம் விதித்துள்ளது. தாமதமாக பந்துவீசிய காரணத்துக்காக ஒட்டுமொத்த மும்பை அணிக்கும் அபராதம் விதித்து ஐ.பி.எல். நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அணித் தலைவர் ஹர்த்திக் பாண்டியாவுக்கு இலங்கை மதிப்பில் 85 இலட்சம் ரூபாய் அபராதமாகவும், மற்ற வீரர்களுக்கு போட்டிக் கட்டணத்திலிருந்து 25 சதவீதமும் அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# இந்தியா - இலங்கை இறுதியில் மோதல்

கொழும்பு, மே 09

கொழும்பு ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற மகளிர் மும்முனை சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரின் ஐந்தாவது போட்டியில் தென்னாபிரிக்காவை எதிர்த்தாடிய இந்தியா 23 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இந்தப் போட்டி முடிவை அடுத்து இந்தியாவும் இலங்கையும் இதே மைதானத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்றன.

ஆறு போட்டிகள் கொண்ட இந்த மகளிர் மும்முனை சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரின் லீக் சுற்றில் இந்தியா 4 போட்டிகளில் 3 வெற்றிகளை ஈட்டியதுடன் இலங்கை 3 போட்டிகளில் 2 வெற்றிகளை ஈட்டியது.

தென்னாபிரிக்கா தான் விளையாடிய 3 போட்டிகளிலும் தோல்வியடைந்ததுடன் தனது கடைசி லீக் போட்டியில் இலங்கையை இன்று எதிர்த்தாடவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 337 ஓட்டங்களைக் குவித்தது.

338 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க மகளிர் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது. (எ)

## ஐ.எம்.எவ்....

நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை மாற்றியமைத்து புதியதோர் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவோம் என தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கி யிருந்த தற்போதைய அரசாங்கம், ஆட்சிக்கு வந்த பின்னர் அந்த வாக்குறு தியை தவிர்த்துவிட்டு நாணய நிதியத் தின் பழைய ஒப்பந்தத்தையே தொடர்கிறது.

இதன் விளைவாக, பொதுமக்கள் தற்போது கடுமையான பொருளாதார சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மேலும், மின்சார கட்டணத்தை 33 வீதத்தால் குறைப்பதாகக் கூறிய அரசாங்கம் தற்போது மீண்டும் கட்டணத்தை அதிகரிக்கத் தயார் நிலையில் உள்ளது - என்றும் கூறினார். (ஐ)

## அர்ச்சுனா...

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தன்னைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சபைக்கு தலைமை வகித்த உறுப்பினர் அரவிந்த செனரத் அறிவுரை கூறினார். ஆனால், அதனை அவர் கேட்கவில்லை. தொடர்ந்தும் ஒழுங்கீனமாகவே நடந்து கொண்டார்.

இதன்போது, தவறான நடத்தைக்காக ஓர் உறுப்பினரை நிலையியல் கட்டளை விதிகளின்படி வெளியேற்ற முடியும் என்று சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கா சபை தலைவருக்கு நினைவூட்டினார். இதன் பின்னர், நிலையியல் கட் டளை 71ஆவது விதியின் கீழ் அர்ச்சுனா எம். பி. சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இதனிடையே, அர்ச்சுனா எம். பி. உரைகளை ஒளிபரப்புவது தற்காலிகமாக தடை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய...

பல்கனியில் தோன்றச் செய்தனர்.

69 வயதான புதிய திருத்தந்தை 14ஆம் லியோ, உங்கள் அனைவருக்கும் அமைதி உண்டாகட்டும். சகோதர, சகோதரிகளே, அன்பானவர்களே, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் முதல் வாழ்த்து இது. நீங்கள் எங்கிருந்தாலும், உங்கள் குடும்பத்தினரை சென்றடைய அமைதியின் வாழ்த்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். "உங்களுக்கு அமைதி நிலவட்டும். கடவுள் நம் அனைவரையும் நிபந்தனையின்றி நேசிக்கிறார்.", என்று கூறி மக்களை ஆசீர்வதித்தார்.

மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் கடைசியாக தோன்றியபோது செய்தது போல், மக்களுக்கு தனது சொந்த ஆசீர்வாதத்தை வழங்க விரும்புவதாகக் கூறிய திருத்தந்தை 14ஆம் லியோ "கடவுளாலும் அவருடைய அன்பாலும் அடைய ஒரு பாலமாக மனிதகுலத்துக்கு கிறிஸ்து தேவை. எங்களுக்கு உதவுங்கள், ஒருவருக்கொருவர் உதவுங்கள், பாலங்களை உருவாக்குங்கள்", என்றார்.

புதிய திருத்தந்தையை தெரிவு செய்வதற்கான நடைமுறைகள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகின. சிஸ்டைன் தேவாலயத்தில் கூடிய கர்தினால்கள் நான்காவது சுற்று வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் புதிய திருத்தந்தையை தெரிவு செய்தனர். இதைத் தொடர்ந்து தேவாலயத்தின் புகை போக்கியிலிருந்து வெள்ளை புகை வெளியிடப்பட்டது. முன்னைய திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவு செய்யப்பட்டமையையும் விட வேகமாக புதிய திருத்தந்தை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளைப் புகை வெளியேறியமையைத் தொடர்ந்து சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் நிறைந்திருந்த மக்கள் மகிழ்ச்சியுடன் கூடிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தியிருந்தனர். திருத்தந்தை வாழ்க என்று பொருள்படும்படியாக 'விவா இல் பாப்பா' என்று இத்தாலிய மொழி யில் கோஷமிட்டு ஆர்ப்பரித்திருந்தனர். (ஐ)

## இலங்கைக்கு...

தொடர்ந்து அன்றையதினம் இரவு இந்த அறிவிப்பை உலக வங்கி வெளயிட்டது.

குறைந்த வட்டியுடனான இந்த சலுகை கடனுதவியானது வலுசக்தி, விவசாயம், சுற்றுலா மற்றும் பிராந்திய அபிவிருத்தி என்பன உள்ளடங்கலாக வேலை வாய்ப்பு மற்றும் முதலீடு சார்ந்த உயர் வாய்ப்புகளையுடைய துறைகளை இலக்காகக்கொண்டு அவற்றின் மேம்பாட்டுக்காக வழங்கப்படவுள்ளது.

இதனூடாக பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் உள்நாட்டு உற்பத்தித்துறையை வலுப்படுத்துவதற்கும் நீண்டகால வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடியவாறான தனியார் முதலீடுகளை உள்ளீர்ப்பதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, "உலக வங்கியின் இந்த நிதியளிப்பு இலங்கை மக்கள்மீதான முதலீடாகும். இந்நிதியுதவி வேலை வாய்ப்பு உருவாக்கத்துக்கும், சிறிய வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும், நாடளாவிய ரீதியில் புதிய வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கும் பங்களிப்புச்செய்யும். நாம் இந்த உதவியின் ஊடாக சமுதாய மட்டத்தில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்புடன் கூடிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறோம்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## தமிழ் கட்சிகள்...

வேறுபட்டதாகவே காணப்படும். அந்தந்தத் தேர்தலுடனேயே ஒப்பீடுகள் மேற்கொள் ளப்பட வேண்டும். அவ்வாறு பொதுத் தேர்தலுடன் உள்ளூராட்சி மன் றங்கள் தேர்தலை ஒப்பிட்டுப் பார்ப்பதாயின், கடந்த தேர்தலில் 32 சத வீத வாக்குகளை பெற்ற சஜித் பிரேமதாஸ இந்த முறை 21 சதவீத வாக்குகளையே பெற்றிருக்கிறார்.

தோல்வியடைந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ பெற்ற வாக்குகளை இந்த தேர்தலில் உறுதிப்படுத்த முடி யாது போயுள்ளது. அவ்வாறெனில், அவர் பெரும் பின்னடைவை சந்தித்திருக்கிறார் என மதிப்பிட முடியுமல்லவா? வரலாற்றில் தனியொரு கட்சி அதிகளவான சபைகளை கைப்பற்றியிருக்கிறது. 266 சபை களை அரசாங்கம் கைப்பற்றியிருக்கிறது. வரலாற்றில் எந்த வொரு கட்சியும் இவ்வாறான வெற்றியை பெற்றிருக்கவில்லை.

இவை தவிர, மேலும் பல சபைகளை அமைப்பதற்கான வாய்ப்பும் அரசாங்கத்துக்குக் காணப்படுகிறது. தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறவில்லை எனக் கூறப்படும் அகலவத்தை பிரதேச சபையில் 20 உறுப்பினர்களில் 6 உறுப்பினர்களை தேசிய மக்கள் சக்தியும் 6 உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சக்தியும் பெற்றுள்ளன. இருவருக்கும் சபைகளை அமைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இவ்வாறு, பல சபைகள் காணப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளர் போட்டியிட்ட தொகுதியில்கூட தோல்வியடைந்துள்ளார்.

சஜித் பிரேமதாஸ 14 சபைகளில் தாம் வெற்றி பெற்றுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவற்றில் ஒன்றில் கூட ஏனைய கட்சிகளின் ஆதரவின்றி அவர்களால் சபைகளை நிறுவ முடியாது. ஐக்கிய மக்கள் சக்தி தனித்து வெற்றி பெறவில்லை. ஆனால், அரசாங்கத்துக்கு 266 சபைகளை மக்கள் வழங்கியிருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் இணைந்து சபைகளை நிறுவுவது குறித்து தமிழ்க் கட்சிகள் உத்தியோகபூர்வமாக எந்த அறிவித்தலையும் அரசாங்கத்துக்கு வழங்கவில்லை. அதிகபட்ச சபைகளில் ஆட்சி அமைப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். தமிழ் கட்சிகள் எம்முடன் பேச்சு நடத்தினால் ஆழமாக ஆராய்ந்த பின்னரே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# யாழ்.பல்கலை பொன்விழா பிரமாண்டமாக பிரான்ஸில்!

### ஜூன் 8 ஆம் திகதி நடைபெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 9

யாழ். பல்கலைக்கழகத்தின் பொன் விழா நிகழ்வுகள் பிரான்ஸில் ஜூன் 8 ஆம் திகதி பிரமாண்டமான முறையில் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பிரான்ஸ் தலைநகர், பரிஸின் புறநகர் பகுதியான Villeneuve Saint- Georges எனும் இடத்தில் உள்ள Espace Shine மண்டபத்திலே இந்தப் பொன்விழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

பிரான்சில் வாழும் பழைய மாணவர்கள் மட்டுமன்றி ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பழையமாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். பாரம்பரிய மற்றும் கலாசார கலை நிகழ்ச்சிகளும் இரவு விருந்தும் கொண்ட இந்த நிகழ்வில், யாழ்.பல்க லைகழத்தில் கற்ற ஆளுமைகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கும் வகையில் இந்த நிகழ்வு அமைய இருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகத்தினதும், வடக்கு கிழக்கு பிரதேச வளர்ச்சிக்கும் பல முயற்சிகளை செய்து வரும் LIFT ஆய்வு அறக்கட்டளை அமைப்பின் அனுசரணையுடன், பிரான்ஸ் இல் வாழும் யாழ் பல்கலைக்கழக பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்து உள்ளார்கள்.

நிகழ்விற்கான நுழைவு சீட்டுகளை இப்போது முதல் பெற்றுக் கொள்ளலாம் என்றும் விரும்புவோர், துழளளநல: 06 63 30 44 09 இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் நுழைவு சீட்டுகளை பெற்று கொள்ளலாம் என்றும் மண்டப

வாசலில் நுழைவுச்சீட்டுகள் விற்கப்படமாட்டாது என்றும் ஏற்பாட்டுக் குழுவினர் .தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள +33 7 53 50 93 96 என்ற இலக்கத்துடன் WhatsApp மூலமாக அல்லது uojfrance@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்ளலாம் என்றும் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

## உள்ளூராட்சி...

தொடர்பில் உரையாடியுள்ளோம். அவர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைத்தால் இணைந்து ஆட்சி அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

அத்துடன், வவுனியா வடக்கு நெடுங்கேணியில் சிங்கள - பௌத்த இனவாத தேசிய மக்கள் சக்தி ஆட்சியை கைப்பற்றுவதைத் தடுக்கும் வகையில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தீர்மானித்துள்ளோம் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

## அரசாங்கம்...

கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"பொதுத் தேர்தலென் பது வேறு, உள்ளூராட்சி சபைகள் தேர்தலென்பது வேறு. எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளுடன்தான் உள்ளூராட்சி சபைகள் தேர்தல் முடிவை ஒப்பிட வேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தால் 2018 உள்ளூராட்சி தேர்தலில் வடக்கில் விரல்விட்டு எண்ணக்கூடிய வகையில்தான் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் இருந்தது. ஆனால், இம்முறை வடக்கில் எல்லா பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெற்றுள்ளது. இது வரலாற்று முக்கியத்துவம்மிக்க விடயமாகும்.

எனினும், மக்களை பிரித்தாள்வதற்கு முற்படும் அரசியல்வாதிகளுக்கு இதனைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டனரெனப் போலிப்பிரசாரத்தை முன்னெடுத்து இன்பம் காண்கின்றனர்.

ஜனாதிபதி தோழர் அநுர குமார திஸநாயக்கமீதும் - எம்மீதும் - எமது அரசாங்கம்மீதும் தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை அப்படியே தொடர்கிறது. மக்களின் எதிர்பார்ப்புகளை எம்மால்தான் நிச்சயம் நிறைவேற்ற முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும். நிச்சயம் அதனை செய்வோம். அதற் குரிய அடித்தளம் தற்போது இடப்பட்டு வருகிறது.

எனவே, சதிகார அரசியல்வாதிகளால் எம்மையும் மக்களையும் பிரிக்க முடியாது. இலக்கை நோக்கிய எமது பயணம் தொடரும். உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த அத்தனை சொந்தங்களுக்கும் நன்றிகள். அதேபோல வாக்களிக்காதவர்களுக்கும் எமது சேவைகள் தொடரும்." - என்றார். (ஐ)

## யானை...

வரப்பட்டன.

கோயில் திருவிழாவின்போது, வெடிகள் கொளுத்தப்பட்டு, தீப்பந்த விளையாட்டுகளும் நடந்தன. வெடிச் சத்தத்தால் இரு யானைகளில் ஒன்று மிரண்டு ஓடியது. இதில், 4 வயது சிறுவனும் இரு பெண்களுமாக மூவர் காயமடைந்தனர்.

காயமடைந்த மூவரும் மீட்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, ஆலய திருவிழாக்களுக்கு எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி யானைகள் அழைத்து வரப்படுவது அதிகரித்துள்ளது. இது தொடர்பில் ஓர் ஒழுங்குமுறை வகுக்கப்பட வேண்டும் என்று வடக்கு ஆளுநரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ-05)

## காணி...

கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே. டி. லால் காந்த சபைக்கு பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமென இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் துறைசார் அமைச்சரிடம் வாய்மொழி மூல விடைக்கான வினாக்களை முன்வைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் கோரப்பட்ட காணிகள் என்ன தேவைக்காகப் பயன்படுத்தப்படவுள்ளன. 5 ஆயிரத்து 700 ஏக்கர் வரையான காணிகளை அவசரமாக சுவீகரிப்பதற்கான காரணம் என்ன என்பதையும் அமைச்சர் இந்த சபைக்கு அறிவிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீண்டகாலம் நடைபெற்ற யுத்தத்தால் மக்கள் இடம்பெயர்ந்து, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உறவினர் - நண்பர்களின் வீடுகளிலும் வாழும்போது அவர்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்காமல் மக்களின் காணிகளை சுவீகரிக்கும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் உள்நோக்கம் என்ன என்பதையும் தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட நீண்டகால யுத்தத்தால் அவர்களின் காணி ஆவணங்கள் தவறவிடப்பட்டுள்ளன என்று மாவட்ட செயலகங்கள் தெரிவிக்கும் நிலையில், இந்தப் புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் காணி உரிமையை உறுதிப்படுத்துமாறு எவ்வாறு கோர முடியும் என்பதையும் அமைச்சர் இந்த உயரிய சபைக்கு அறிவிக்க வேண்டும் - என்றும் கூறினார்.

ஈழநாடு
Eelanadu

# பகிடிவதை தொடர்பில் அதிகாரிகள் அலட்சியம்

## சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 09

பகிடிவதைச் சம்பவங்கள் உரிய கல்விக் கட்டமைப்புக்களின் அதிகாரிகளின் அலட்சியத்தினால் நடைபெற்றிருப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பகிடிவதைச் சம்பவங்கள் தொடர்பில் அவ்வதிகாரிகளும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

மிகமோசமானதும், மனிதத் தன்மையற்றதுமான பகிடிவதையின் காரணமாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவன் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் நாம் மிகுந்த கவலையடைகிறோம்.

எந்தவொரு கல்வியியல் கட்டமைப்புக்களிலும் எந்தவொரு மாணவருக்கு எதிராகவும் பகிடிவதை மற்றும் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அது நாட்டின் சட்டத்தை மாத்திரமன்றி, அடிப்படை மனிதாபிமானக் கோட்பாடுகளையும் மீறுகின்ற செயலாகும்.

அதேபோன்று 1998 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க கல்விக் கட்டமைப்புக்களில் பகிடிவதை மற்றும் ஏனைய வன்முறை தடுப்புச் சட்டத்தின் சரத்துக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படாமை குறித்து நாம் தீவிர கரிசனை கொண்டிருக்கிறோம்.

இவ்வாறான சட்டவிரோத பகிடிவதை செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகளை பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்விக் கட்டமைப்புக்களின் அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் - என்றுள்ளது. (அ)

# ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் மேயர்களை நியமிக்கவேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, மே. 09

உள்ளூராட்சி அமைப்புகளில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் மேயர்களை நியமிக்கவும், நியமிக்கப்படவேண்டிய பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அறிவிக்கவும் தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையகத் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவிக்கையில்-உள்ளூராட்சி அமைப்புகளில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்ற தொடர்புடைய அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு வரும் நாட்களில் தலைவர்கள், மேயர்களை நியமிக்க அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும். கூடுதலாக, ஒவ் வொரு உள்ளூராட்சி அமைப்புக்கும் நியமிக்கப்பட வேண்டிய பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

உள்ளூராட்சி அமைச்சால் வெளியிடப்பட்ட தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பின்படி, உள்ளூராட்சி அமைப்புகள் ஜூன் 2ஆம் திகதி முதல் கூட்டத்தை நடத்த உள்ளன. அதற்கு முன்னர் எங்கள் தரப்பிலிருந்து என்ன செய்ய வேண்டும் என்பதை நாங்கள் முடிவு செய்வோம் - என்றார். (அ)

# கொழும்பிலிருந்து லாகூருக்கு விமானசேவை இடைநிறுத்தம்!

கொழும்பு, மே. 09

லாகூரில் உள்ள அனைத்து வணிக விமானங்களுக்கும் பாகிஸ்தான் வான் பரப்பு மூடப்பட்டதைத் தொடர்ந்து, பாகிஸ்தானின் லாகூருக்கான அனைத்து விமானங்களையும் உடனடியாக நிறுத்துவதாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் அறிவித்துள்ளது.

பாதுகாப்புக் கவலைகளை மேற்கோள் காட்டி, கராச்சிக்கான விமானங்கள் தற்போது வரை பாதிக்கப்படவில்லை என்பதை விமான நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் இந்த இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இப்பகுதியில் பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டன மற்றும் வான்வெளி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பதற்றங்கள் அதிகரித்துள்ள நிலையில், பல சர்வதேச விமான வழித்தடங்களில் இடையூறுகள் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

லாகூர் விமானங்களில் முன்பதிவு செய்த பயணிகள், பயண அட்டவணையை மாற்றுவது அல்லது பணத்தைத் திரும்பப் பெறுவது தொடர்பான கூடுதல் தகவலுக்கு விமான நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளுமாறு சிறிலங்கன் எயார்லைன்ஸ் கேட்டுக் கொண்டுள்ளது. (அ)

# மின் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படாது!

## எரிசக்தி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, மே. 09

தற்போதைய சூழ்நிலையில் மின்சாரக் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளாமல் பராமரிக்க எதிர்பார்ப்பதாக எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ஜெயக்கொடி இந்தக் கருத்தை வெளியிட்டார்.சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பத்துக்கு ஏற்ப எதிர்காலத்தில் மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று எதிர்க்கட்சி சபையில் கேள்வி எழுப்பியது.

இதற்கு பதிலளித்த எரிசக்தி அமைச்சர், கட்டணங்களை அதிகரிக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்றாலும், நாட்டின் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் மின்சாரக் கட்டணங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்றும் கூறினார். (அ)

# இலங்கை - இந்தியா புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக மனு!

கொழும்பு, மே. 09

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அண்மையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வலுவற்றதாக்கி உத்தரவிடக் கோரி, வைத்தியர் குணதாச அமரசேகர உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்றை தாக்கல் செய்தனர்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட அமைச்சரவை பெயரிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அண்மையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம், நாட்டின் அரசியலமைப்புக்கும் சர்வதேச சட்டத்துக்கும் முரணானது என்று மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்கள் குறித்து பொதுமக்களுக்கு இன்னும் தெரிவிக்கப்படவில்லை என்றும், இது மக்களின் அரசியலமைப்பு உரிமைகளை மீறுவதாகும் என்றும் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கையின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு தீங்கு விளைவித்துள்ளதாகவும், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் கையெழுத்திடும் அரசின் நடவடிக்கை முற்றிலும் சட்டத்துக்கு எதிரானது என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதன் ஊடாக தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறும், அந்த ஒப்பந்தங்களை செயல்படுத்துவதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் உயர்நீதிமன்றில் கோரியுள்ளனர்.

அத்துடன் அடிப்படை மனித உரிமைகளை மீறியதற்காக பிரதிவாதிகளிடம் இருந்து 20 இலட்சம் ரூபாய் இழப்பீட்டை வசூலித்து உத்தரவிடுமாறும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (அ)

# பரீட்சை ஆணையாளர் நாயகமாக சுபாசினி இந்திகா குமாரி நியமனம்!

கொழும்பு, மே. 09

புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக ஏ.கே.சுபா சினி இந்திக்கா குமாரி லியனகே நியமிக்கப்பட்டுள்ளார்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பதவியில் கடமை யாற்றிய எச்.ஜே.எம்.சீ.ஏ. ஜயசுந்தரவின் சேவைக்காலம் 06 ஆம் திகதியுடன் முடிவடைந்ததையடுத்து குறித்த பதவிக்கு தற்போது இலங்கை பரீட்சைகள் திணைக்களத் தின் பரீட்சைகள் ஆணையாளர் பதவியில் கடமையாற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான ஏ.கே.சுபாசினி இந்திக்கா குமாரி லியனகே உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைய இந்த நியமனத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# தலசீமியா நோயினால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை உயர்வு!

கொழும்பு, மே. 09

நாட்டில் 2,000 முதல் 2,500 குழந்தைகள் தலசீமியாவால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் 40 முதல் 50 வரையிலான குழந்தைகள் தலசீமியாவால் பாதிக்கப்படுவதாக அமைச்சின் தொற்று அல்லாத நோய்கள் பிரிவின் பணிப்பாளர் நிபுணர் வைத்தியர் சமிதி சமரக்கோன் தெரிவித்தார்.

உலக தலசீமியா தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய வைத்தியர் சமிதி சமரக்கோன் தெரிவித்தார்.

இந்த ஆண்டு தலசீமியா தினம் "தலசீமியாவுடன் சமூகங்களை ஒன்றிணைத்தல், நோயாளிகளுக்கு முன்னுரிமை அளித்தல்" என்ற கருப்பொருளின் கீழ் கொண்டாடப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.